# உறவுகள்



சித்திரை வைகாசி ஆனி 2025

uravukal


Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE.

இதழ் 94

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் காலாண்டுப் பத்திரிகை




ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள்



# உள்ளே.....

இதழ் 94


3 ஆசிரியர் பக்கம்

4 தேடுவோர் கண்டடைவர்..

5 உயிருள்ள இறைவார்த்தை...

6 புது வாழ்வு தரும்.........

7 அன்னை மரியாவும்......

9 எதிர்நோக்கின் திருப்பயணிகளாய்

12 முட்டாள்கள் தினம்......

13 மழலை மஞ்சம்

16 அன்பின் இனிமையைய்...

17 மூச்சுப் பயிற்சி

18 வெற்றியின் தோல்வி

24 குறுக்கெழுத்துப் புதிர்


**20- 04-2025 உயிர்ப்பு ஞாயிறு பெருவிழா**
**12:30 Eglise St. Joseph des Nations -75011-Paris**

**27- 04-2025 இறை இரக்கப் பெருவிழா**
**Aubervilliers பணித்தளப் பெருவிழா**

## சிறுவர்களுக்கான ஒன்று கூடல்



பெல்வில் சிற்றாலயத்தில்
நேரம்: 9:00
06-04-2025
04-05-2025
01-06-2025


**ஆசிரியர்:**
அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

**உதவி ஆசிரியர் குழு:**
**மறையாசிரியர்:** திரு: ரி. எம்.சந்தியாகு
திருமதி: றெஜீனா சிவகுமாரன்
திரு: ஆனந்தன் செபமாலை
திருமதி:வில்லியம் றெஜினோல்ட்
திருமதி: ஏஞ்சல் யேக்கப்
செல்வி: லூசியா மேரி
செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா



**தொடர்புக்கு:**

« URAVUKAL »
Aumônerie Tamoule Catholique Srilankaise
Chapelle Notre Dame Réconciliatrice
57, Bld de Belleville
75011 Paris - France
☎: 01 48 06 95 05
**E - mail:** uravukhal.france@gmail.com
**Website:** www.uravukal.org



**வெளியீடு:**
இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரானஸ்

**கணினி வடிவமைப்பு:**
றெஜீனா சிவகுமாரன்
இணையதள பதிப்பாசிரியர்

**சந்தா விபரம்**
தனிப்பிரதி ஒன்று: 2€
வருடச் சந்தா விபரம்: 20€
ஏனைய நாடுகளுக்கு: 22€

# ஆசிரியரிடமிருந்து..........



**அன்பர் இயேசுவின் இனிய அன்பர்களே!**

நமக்குள் இருக்கும் ஆன்மீக இருளை அகற்றியும் நம் இதயக் குகையை அடைத்திருக்கும் பாவக் கற்களை தூக்கியெறிந்தும் இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சிகளாக விளங்க உயிர்ப்புப் பெருவிழா நம்மை இன்று உற்சாகப்படுத்துகிறது.

இயேசுவின் மரணம் கழுமரத்தில் முடிந்த காவியம் அல்ல... ஒரு அமர விளக்கு. மூன்றுநாள் மட்டுமே தன் வெளிச்சத்தை புதைத்து வைத்திருந்தது இந்த மரணம்.

பல மனிதர்கள் வரலாற்றில் உயர்ந்துள்ளனர். ஆனால் ஒரு சில மனிதர்களால் வரலாறே உயர்ந்துள்ளது. இந்த ஒரு சிலரில் சிறப்புக்குரியவராக விளங்குபவர் இயேசு கிறிஸ்து.

இப்படிப்பட்ட மாபெரும் உயிர்ப்புப் பெருவிழா வைக் கொண்டாடக் காரணம், உயிர்ப்பு என்றோ நடந்த ஒரு வித்தியாசமான, வீரியமான நிகழ்ச்சி என்பதால் மட்டுமல்ல, இந்த உயிர்ப்பு நம்மில் நாளும் நடைபெற வேண்டும் என்று அழைப்பு விடுக்கவும்தான். இயேசுவின் உயிர்ப்பை கொண்டாடும் நாம் எப்படி உயிர்க்க வேண்டும் என சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

இயேசுவின் இறப்பும் உயிர்ப்பும் இப்பூமியின் கறைபட்ட மனிதனின் பாவச்சுமைகளை அகற்றி மனித வாழ்வை இலேசாக்கி விட்டது. பிறரின் துன்பச் சுமைகளை நாம் ஏற்கும் போது நமது துன்பங்கள் நமக்குப் பாரமாக தெரியாது. இயேசு நமது மகிழ்ச்சியை மிகுதியாக்க தம் மேல் நம் கவலைகளை சுமந்து கொண்டார்.

நாமும் பிறரின் துன்பச் சுமைகளை நமதாக்கும் போது நாமும் பிறரின் மகிழ்ச்சியை மிகுதியாக்குகிறோம். உயிர்த்த யேசு செய்த பணியை நமதாக்குகிறோம்.

என்னை சுமப்பதனால் இறைவா உந்தன் அன்பு குறைவதில்லை எனப்பாடும் நாம், பிறரின் வளர்ச்சிக்கு உயர்வுக்கு உற்சாகத்துக்கு வெற்றிக்கு தோள் கொடுக்க அவர்களின் கவலைகளை ஏற்க முன் வருவோம். அப்போது நமது வாழ்வும் லேசானதாகும், நமது அயலாரின் வாழ்வும் லேசாகும். வாழ்வில் எல்லாவற்றையும் லேசானதாக்கும், இறைவன் இந்த உயிர்ப்பு பெருவிழா வழியாக நாம் சந்திக்கும் எல்லா நெருக்கடிகளையும் லேசாக்க ஆசைப்படுகிறார். இயேசுவைப்போல அயலாருக்காக வாழ நம்மை அர்ப்பணிப்போம். உறவில் நட்பில், அன்பில் உயிர்த்தெழுவோம் .

**உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்**

உறவில் நிலைக்கும்...

அருட்பணி: போல் மத்தியு மதன்ராஜ். அ. ம. தி




**25- 05-2025 - சார்ட் திருத்தல திருயாத்திரை**

**14:30 Cathedrale Notre Dame**

**18 Cloitre Notre dame**

**Chartres**



# தேடுவோர் கண்டடைவர் மானிடரே!

மறையாசிரியர் தி. ம. சந்தியாகு, வேங்கிடக்குளம் இந்தியா

1. தேடுவோர் கண்டடைவர் திகையாதீர் மானிடரே!
தேவன் நமக்களித்த திருக்கொடை இதுவன்றோ!
வாடுவோர் அதையிழந்து வளத்தினை அடைந்திடவே,
வாஞ்சையோடழைக்கும் இறை வந்திடுவார் நம் அழைப்பில்!
நாடுவோர் நலனடைவர் நமக்காகக் காத்திருந்து.
நல்லவற்றைச் செய்யும் இறை நம்மோடிருக்கின்றார்!
கூடுவோர் அவர் குரலைக் கூர்ந்து கேட்டுவிட்டால்
கூடாத செல்வமுண்டோ கூறுங்கள் மானிடரே!

2. உறவுகள் கூறுகின்ற உயர் குணத்தைக் கேட்டிடுங்கள்!
உயர்வீர்கள் உண்மையிது! உணர்வீர்கள் வெகுவிரைவில்!
மறவுகள் தேவை பிறர் மனத்தாலே செய்துவிட்ட,
மாபனவச் செயல்தனை மன்னிக்கும் உளப்பாங்கு!
துறவுகள் உங்களுக்குத் துணை நிற்கும் எப்பொழுதும்,
துணிந்தே நன்மையினை தொல்லுலகில் செய்துவிட்டால்!
சிறகுகள் முளைத்துவிடும் சேவை செய்ய உங்களுக்கு
சிறிதேனும் அஞ்சவேண்டாம் சேசுதுணை நமக்கிருக்கும்!

3. வாருங்கள் உட்கார்ந்து வளமாகச் சிந்திப்போம்!
வந்திருக்கும் துன்பங்களை வக்கணையாய் விரட்டிடுவோம்!
தாருங்கள் ஒத்துழைப்பை தங்கமான பிள்ளைகளே
தந்தை இறை நம்மை தவிக்க விடமாட்டார் !
சேருங்கள் சேவைசெய்ய, செகம் நம்மை வாழ்த்தி நிற்கும்.
செய்திடும் தருமங்கள் செழிப்போடு வாழவைக்கும்!
பாருங்கள் உங்கள் இல்லம் பாரினில் சிறந்து நிற்கும்
பாடுங்கள் இறைபுகழ் பக்தியுடன் எந்நாளும்

4. இறப்பினை வென்ற இயேசு இருக்கின்றார் நம்மோடு,
இன்றே புறப்படுவோம் இகமதில் அறிவிக்க!
பிறப்பினைப் புதிதாகப் பெற்று விட்ட நாமின்று,
பேசிடுவோம் பகைவரோடு பிணிதீர்க்கும் மனநிலையில்!
சிறப்பினை நாம் பெறவே சிறந்தவழி எதுவென்றால்
சிந்தித்துச் செயலாற்றி சேவையில் நிலைப்பதுவே!
அறப்பணி செய்திடவே அழைக்கும்இறை குரல்கேட்போம்,
அன்புடன் சங்கமிப்போம் ஆண்டவர் திருவடியில்!

5. எத்தனையோ விழாக்களை நாம் எதிர்
கொள்ள இருக்கின்றோம்,
எதிர் நோக்கு திருப்பயணியாய் இந்தாண்டு யூபிலியில்,
அத்தனையும் வெற்றி தரும் அயராது உழைத்திடுவோம் !
அருகினில் இருப்பார்க்கு ஆண்டவரைச் சொல்லிடுவோம்!
முத்தனைய திட்டங்கள் மூவொறிறை துணையால்,
முழுமையாய் பயனிக்கும் முறையோடு நடை பயில்வோம்!
வித்தகராம் இயேசுவின் விண்ணேற்ற விழாநாளில்,
வெகுமதி கிடைத்துவிடும் வேண்டலில் நிலைத்திடுவோம்!



## OMI Fathers பற்றியது.....

சகாராப் பாலைநிலத்தில் இருந்து உரோமைக்கு!

**அ. ம. தி. களின் உயர் தலைவர்!**

துறவற சபைகளின் உயர் தலைவர்கள் தங்களின் சபை உறுப்பினர்கள் பணியாற்றும் நாடுகளுக்கு நேரில் சென்று உறுப்பினர்களின் வாழ்வையும் பணிகளையும் பார்ப்பது வழக்கமான ஒன்றாக இருந்து வருகின்றது.

அவ்வகையில்தான் அ. ம. தி. களின் உயர் தலைவர் பேரருட்திரு. லூயிஸ் இக்னாசியோ றோயிஸ் அலன்சோ அடிகளாரின் வருகையும் 2024ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில்(ஒக்ரோபர்14 – நவம்பர்02) அமைந்திருந்தது.

இலங்கையில் தற்போது கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இரு மாகாண அலகுகள் இருப்பதனால் ஒக்ரோபர் 14 தொடக்கம் 23 வரை கொழும்பு மாகாண உறுப்பினர்களையும், ஒக்ரோபர் 24 தொடக்கம் நவம்பர் 01 வரை யாழ். மாகாண உறுப்பினர்களைச் சந்தித்திருக்கின்றார்.

கொழும்பு மாகாண உறுப்பினர்களைச் சந்திக்கும் பணி நிறைவடைந்த நிலையில் யாழ். மாகாணத்தில் அவரின் வருகையும் சந்திப்பும் நடைபெற்றது.

மேய்ப்புப்பணி சார்ந்த வருகையாகவும் சந்திப்பாகவும் இருப்பதோடு உத்தியோக பூர்வ வருகை யாகவும் இது அமைந்திருந்தது. அ. ம. தி. களின் குழுமங்களைச் சந்திப்பது, அவர்களின் பணித் தளங்களைச் சென்று பார்ப்பது, அ. ம. தி. களின் பணிகளால் பயன்பெறுவோர்கள் உடனான சந்திப்பு, அ. ம. தி. களோடு பணிபுரியும் பொதுநிலையினர், துறவிகள், ஏனைய சமயத்தினர், ஆயர்கள் போன்றோருடனான சந்திப்பு என உயர் தலைவரின் வருகை பல்வேறுபட்ட நிகழ்வுகளைக் கொண்டிருக்கும்.

**பேரருட்திரு ‘ சிச்சோ’ அடிகளார்:**

பேரருட்திரு. லூயிஸ் இக்னாசியோ றோயிஸ் அலன்சோ அடிகளார் தமது தாய் சூட்டிய ‘ சிச்சோ’ என்ற பெயரினாலேதான் அதிகமாக அறியப்பட்டவர். சிச்சோ என்ற பெயர் அவருக்கு மிகவும் நெருக்கமான, செல்லப் பெயராக இருப்பது குறிப்பிடத்தக்கது.


மிகுதி 15ம் பக்கம்

## உயிருள்ள இறைவார்த்தை நம்மை கடவுளின் அன்புறவில் வாழச்செய்யும்

அம்புறோஸ் பீற்றர் - மறையாசிரியர்

**இறைவனுக்கும் இறைவனுடைய திட்டத்திற்கும் எதிராக இருப்பவன் சாத்தான். எனவே இறைவனுடைய பிள்ளைகளாகிய நமக்கும் நம்முடைய வாழ்வில் நாம் சரியான பாதையில் செல்லும்போது ஆசை காட்டி அல்லல்பட வைப்பவன்: மகிழ்ச்சி தருபவன் போலவும், ஆபத்தில் நம்மை காப்பாற்றுபவன் போலவும் நம்மைக் கடவுளிடமிருந்து பிரிக்கின்றான். தவறான பாதையில் நம்மைக் கரம் பிடித்து அழைத்துச் சென்று பாதாளத்தில் தள்ளுவானே ஒழிய கரம் பிடித்து நம்மை காப்பாற்ற மாட்டான். ஏழை ஒருவனுக்கு அமெரிக்காவை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் வராது. மாறாக சாண் வயிற்றைக் கழுவ யார் வயிற்றிலாவது அடிக்க வேண்டும் என்ற சோதனையைத் தான் சாத்தான் கொடுப்பான்.**

தொடக்க நூலின் தொடக்கத்திலே கடவுள் உலகத்தைப் படைத்து உலகத்தையே ஆண்டு கொள்ளும் அதிகாரத்தை ஆதாம் ஏவாள் பொறுப்பில் ஒப்படைத்தாரென வாசிக்கின்றோம். அவர்களுக்கு சோதனையோ சாதாரண பழத்தின் மேல். அவர்கள் சோதனையை வெல்லவில்லை. மாறாக சோதனைக்கு உட்பட்டார்கள். அவர்கள் வழியாக பாவம் இவ்வுலகில் ஆட்சிப் பொறுப்பேற்றது. அந்த சாத்தானின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர நமதாண்டவர் மனிதனாக அவதரித்து பல சோதனைகளை வென்று சாதனை படைத்து மனிதனுக்கு மீட்பை அளித்தார். ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் சோதனை என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் நாம் அவற்றை வென்று சாதனை படைக்கும் போது நமது மகிழ்ச்சி இரட்டிப்பாக மாறும். இயேசு தந்தையுடன் உரையாடி இரண்டறக் கலக்க வேண்டும் என்ற நோக்கில் நாற்பது நாட்கள் உண்ணவில்லை. ஆன்ம தாகத்தைப் போக்க பாலைவனம் சென்றுள்ள இயேசுவை தவறாகப் புரிந்துகொண்ட சாத்தான் மூக்குடைபட்டு பின்வாங்குகின்றான்.




**இறைவனின் சித்தம்** கடவுளின் நீண்ட நாள் ஆசை, சித்தம் தன்னுடைய ஆட்சியை உலகில் நிலைநாட்ட வேண்டும் என்பதுதான். அதற்கான வழிகள். செபம், தபம், ஒறுத்தல், பாடுகள், மரணம், உயிர்ப்பு இவை அனைத்தையும் தன் பணியாகக் கருதி வாழ்கின்ற. இயேசுவிடம் சாத்தான் கூறுகிறான். ஒரு சிறிய விளம்பரம் போட்டுக் காட்டுகின்றான்.

உன்னுடைய இறையாட்சியை அடைய என்னைத் தெண்டனிட்டு வணங்கி, இறைமகன் என்ற மேன்மையில் இருந்து பாவம் என்ற பள்ளத்தில் குதித்து ஆட்சியை நிலைநாட்டலாமே என்ற விளம்பரம் போன்ற ஒரு போதனை. ஆனால் இயேசுவுக்கு வந்த சோதனைகள் அனைத்தும் சாதனையாக, வெற்றியாக மாறியது.

காரணம் அவர் பற்றற்றவர்களை இறுகப்பற்றினார். ஆழ்ந்த செபம் செய்தார். ஆதாமின் மூலம் உலகில் நுழைந்த பாவத்தைப் போக்கி நமக்கு மீட்பை வழங்கினார். இங்கு இயேசுவுக்கு வந்தது சாதாரண சோதனைகள் அல்ல. மாறாக அவர் எதற்காக வந்தாரோ அதையே விட்டுவிட்டு விலக வைக்கக் கூடிய சோதனைகள். இயேசுவோ வெற்றி கொண்டார். இந்தத் தவக்காலம் நமக்கும் ஒரு வெற்றியின் காலமாக மாற வேண்டும். நமது அன்றாட வாழ்வில் எண்ணிலடங்காத சோதனைகளைச் சந்திக்கின்றோம். மாறி வரும் முன்னேற்றத்துக்கும், சூழலுக்கும் ஏற்ப புதிய புதிய சோதனைகளை நாமும் சந்திக்கின்றோம். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. “சோதனையிலிருந்து விடுபட சிறந்த வழி சோதனைக்குட்படுவதே” அவ்வாறு நாம் செய்தோம் என்றால் நாம் கிறிஸ்துவின் அன்பு பிள்ளைகள் என்பதற்கும் நமக்காக கிறிஸ்து பட்ட பாடுகளுக்கும் பொருள் இல்லாமல் போய்விடும்.

அனைத்து மனிதர்களையும் உலகிற்கு அறிமுகப்படுத்துவது குடும்பம். இன்றோ குடும்பங்கள் எளிதில் அதன் தன்மையில் இருந்து மாறுபடுகின்றன. காரணம் தவறான வாழ்க்கை வாழ்பவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றி நாமும் அதே வழியில் கடக்க முற்படுகின்றோம்.

**மனிதத் தன்மைகள்**

அன்பு, இரக்கம், மன்னிப்பு, பரிவு போன்றவைகள்தான். ஆனால் இன்று மனிதத் தன்மைகளை இழந்து மனித நிலையில் இருந்து விலங்கு என்ற கடை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். காரணம் உலகப் பற்றின் மீது அதிக நாட்டம். அந்தக் காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் செப அறை என்று ஒன்று இருக்கும். ஆனால் இன்று வீட்டின் உள் நுழைந்தால் முன் சாலையில் இருப்பது சாத்தான் அறை. அதுதான் தொலைக்காட்சி அறை. அலுவலகம், பள்ளி செல்லும் முன்னும், படுக்க முன்பும், துயில் எழுந்தவுடனும், தொலைக்காட்சிப் பெட்டியின் முகத்தில்தான் கண் விழிக்க ஆசைப்படுகின்றோம். கடவுளை நம்மிடமிருந்து எடுத்துவிட்டு நஞ்சை நம்மில் உருவாக்குகின்றது இந்தத் தொலைக்காட்சி.

இவ்வாறு இன்றும் நாம் சோதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். சாத்தான் நம் வல்லமையைத் தீண்டுவான். கடவுளோ நம் வலுவின்மையில் வல்லமையைக் காண்பவர். நாம் வலுவிழந்தவர்கள், சாதாரண மனிதர்கள். நாம் சோதனைகளை வென்று வெற்றி பெற வேண்டுமாயின் பற்றற வரை இறுகப் பற்ற வேண்டும். குழந்தைகளுக்கும் செபிக்க கற்றுத்தர வேண்டும். செபத்தின் வல்லமையை நாம் நம் குழந்தைகளுக்கு எடுத்துக் கூற வேண்டும். இயேசு செபித்தார். வெற்றி கொண்டார். எமது வாழ்க்கைப் பயணத்தில் செபமே அச்சாணியாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால் எந்த ஆபத்துமின்றி நாம் இவ்வுலகில் பயணம் செய்ய முடியும். அத்துடன் இறைவார்த்தையை ஆர்வமுடன் வாசித்து அதன்படி வாழ வேண்டும். அப்போதுதான் உயிருள்ள இறைவார்த்தை நம்மைக் கடவுளின் அன்புறவில் வாழச்செய்யும். ✽✽✽✽

# புது வாழ்வு தரும் இயேசுவின் உயிர்ப்பு

உலகெங்கிலும் இருக்கும் கிறிஸ்தவர்கள் மிகச்சிறப்பாகக் கொண்டாடும் நாள்தான் ஈஸ்டர். இயேசுபிரான் உயிர்த்தெழுந்த நாள். இந்த நாளைச் சிறப்பு ஆராதனைகளோடு கொண்டாடுவர். தவக்காலத்தில் அவர்கள் அனுபவித்த அனைத்து சிரமங்களும் இந்த நாளின் உதயத்தில் தொலைந்து, நம்பிக்கையூட்டும் ஒரு புதிய நாளாக ஈஸ்டர் பிறக்கும். சிலுவையில் அறையப்பட்டதிலிருந்து மூன்றாம் நாள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார். மரணத்தின் மீது தனது வெற்றியை அவர் நிறுவிய தினம் அது.

இது குறித்து தூயபவுல், கொரிந்தியருக்கு எழுதிய சுவிசேஷத்தில், "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால், நாங்கள் அறிவித்த நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1 கொரி 15: 14) என்கிறார். பவுலின் இந்த வார்த்தைகளின் உண்மையான பொருள்தான் என்ன? "இயேசுவின் உயிர்ப்பு தான் கிறிஸ்துவ வாழ்வின் அடித்தளம்" என்பதை அல்லவா அவை உரக்கச் சொல்கின்றன. இயேசு, தான் சொன்னபடியே (மாற் 8:31 மத் 17:22 லூக் 9:22 யோவா 2:19) உயிர்த்தெழுந்தார். மேலும் இயேசு, தன்னுடைய உயிர்ப்பின் மூலம், தான் இறைமகன் என்பதையும் (திப 2: 32–36 உரோ 1:4), கடவுள் தனக்குக் கொடுத்த, மனிதர்களைக் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக்கும் பணியைச் (உரோ 4: 24–25) செவ்வனே செய்து, நிறைவு செய்து விட்டேன் என்பதையும் அவர் நிரூபித்துக் காட்டுகிறார்.

இயேசுவின் உயிர்ப்பு, நாமும் ஒருநாள் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையைத் தருகின்றது என்றால் அது மிகையாகாது. « இறுதிநாள் உயிர்த்தெழுதலின்போது அவனும் (லாசரும்) உயிர்த்தெழுவான்" என்று சொன்ன மார்த்தாவுக்குப் பதிலளிக்கும் இயேசு, உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார் என்பார் (யோவா 11: 24–25). இயேசு கூறும் இந்த வார்த்தைகள், யார் யாரெல்லாம் அவர்மீது நம்பிக்கை கொண்டு வாழ்கின்றார்களோ அவர்கள், இறந்தபின்னும் வாழ்வார்கள் என்பதை எடுத்துச் சொல்கின்றது. தூய பவுலும் இதைத்தான், "அவரோடு இறந்தால், அவரோடு வாழ்வோம்" (2திமொ 2:11) என்று கூறுகிறார். ஆகவே, இயேசுவைப் போன்று நாமும் ஒரு நாள் உயிர்த்தெழ அவர்மீது நம்பிக்கை வைத்து வாழ்வது தேவையான ஒன்று.

ஒரு தந்தையும், அவருடைய சிறு வயது மகனும் ஒரு கிராமச் சாலையின் வழியாக, நான்கு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது தேன்குளவி ஒன்று சிறுவனுக்கு முன்பாக அங்கும் இங்கும் பறந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்து பயந்துபோன மகன் தன் தந்தையிடம், அதை அங்கிருந்து விரட்டும்படி சொன்னான். தந்தையோ அந்தத் தேன் குளவியைப் பிடித்து வெளியே எறிந்தார். அப்படியும் மகனுக்குத் தேன்குளவியைப் பற்றிய பயம் போகவில்லை. எனவே, அவன் தன் தந்தையிடம், « அப்பா! அந்தத் தேன்குளவி தன்னிடம் இருக்கும் கொடுக்கால் என்னைக் கொட்டினால், வலியில் உயிர் போய்விடும்" என்றான். அதற்குத் தந்தை அவனிடம், « அந்தத் தேன் குளவி இனிமேல் உன்னைக் கொட்டுவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில், அது என்னை ஏற்கெனவே கொட்டிவிட்டது" என்று தன்னுடைய கையில் இருந்த அதன் கொடுக்கைக் காட்டினார்.

எப்படி அந்தத் தந்தை தன் மகனைத் தேன்குளவி கொட்டிவிடக் கூடாது என்பதற்காகத் தன்மேல் குளவியின் கொட்டினை வாக்கிக் கொண்டாரோ, அதுபோன்று இந்த மனித குலத்தின்மீது பாவம் /சாவு வெற்றிகொள்ளக் கூடாது என்பதற்காக இயேசு தன்மீது சாவை ஏற்றுக்கொண்டு, கடைசியில் அதை வெற்றி கொண்டார். அதனால்தான் தூய பவுல், சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கோ?" என்று கேட்கிறார் (1 கொரி 15: 55). அப்படியென்றால் பாவம் அழிக்கப்பட்டு (உரோ 6: 10–11) நாம் அனைவரும் புதுப்பிறப்பாக மாறியிருக்கிறோம் என்பது உண்மையாகிறது. எனவே, புதுப்பிறப்பாக மாறியிருக்கும் நாம், மீண்டும் பழைய பாவ வாழ்க்கை வாழாமல், புதிய இயல்புகளான (கலா 5:22) அன்பு, பரிவு, பொறுமை, நம்பிக்கை போன்றவற்றை அணிந்துகொண்டு வாழ வேண்டும். அப்போதுதான் இயேசு இறந்து, உயிர்த்ததற்கு அர்த்தமிருக்கும். அப்படியில்லாமல், நாம் பழைய பாவ வாழ்க்கையை வாழ்ந்தால், இயேசுவின் உயிர்ப்பு எந்தவிதத்திலும் அர்த்தம் பெறாது.

'நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால், மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள்" என்பார் தூய பவுல் (கொலோ 3:1). ஆகவே, இயேசுவின் உயிர்ப்புக்கு அர்த்தம் சேர்க்கும் வகையில், மேலுலகு சார்ந்த காரியங்களான அன்பு, இரக்கம், மன்னிப்பு போன்றவற்றை ஒருவர் மற்றவரிடம் காட்டுவோம். அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

# அன்னை மரியாவும், யோசேப்பும் கூறுவது என்ன?

குடந்தை ஆயர் கு. அந்தோனிசாமி

இயேசு தொடக்க நூல் 1:26–யும், 24–யும் மேற்கோள் காட்டி, பரிசேயரைப் பார்த்து, இருவரும் (கணவனும், மனைவியும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள். இருவர் அல்லர் ஒரே உடல் என்கின்றார். கடவுளின் விருப்பத்திற்கு எதிராக இந்த 21–ஆம் நூற்றாண்டிலேயே எத்தனையோ குடும்பங்களிலே கணவனும், மனைவியும் பிரிந்து வாழ ஆசைப்படுவதை நாம் காண்கின்றோம். இதோ இறுதிவரை பிரியாது வாழ கணவனும், மனைவியும் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட திருக்குடும்பத்தின் தலைவியும், தலைவரும் நம்முன்னே வந்து, நிற்கின்றார்கள். நமது அன்னை கன்னி மரியா கூறுவது என்ன? மனைவியரே, உங்கள் கணவர்களிடமிருந்து எதையுமே எதிர்பார்க்காதீர்கள் என்கின்றார். மரியா ஏழுமுறை பேசியதாக நற்செய்தி கூறுகின்றது.



1. “ இது எப்படி நிகழும் ? நான் கன்னி ஆயிற்றே" (லூக் 1:34).

2. "நான் ஆண்டவரின் அடிமை : உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” (லூக் 1:38).

3. “ மரியாவின் வாழ்த்தை எலிசபேத்து கேட்டபோது (லூக் 1:39–45).

4. “ ஆண்டவரை எனது உள்ளம் .. ” (லூக் 1:46 – 55).

5. "மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? ” (லூக் 2:48).

6. "திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது" (யோவா 2:3).

7. “ அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் " (யோவா 2:5).

மரியா ஏழுமுறை பேசினார். ஆனால் ஒருமுறைகூட தனக்கென்று எதையுமே கடவுளிடமிருந்தோ, யோசேப்பிடமிருந்தோ, இயேசுவிடமிருந்தோ கேட்கவில்லை. எதையும் எதிர்பார்க்காமல் மரியா, தம் குடும்பத்தின் மீது மாரி போல் அன்பு மழையைப் பொழிந்தார். எதிர்பார்த்தால்தானே ஏமாற! மரியா ஏமாறவேயில்லை! எங்கே ஏமாற்றமில்லையோ அங்கு சண்டை சச்சரவு இருக்காது பிரிவினை இருக்காது. மரியாவைப் போன்று யோசேப்பும் கடவுளிடமிருந்தோ, மரியாவிடமிருந்தோ, இயேசுவிடமிருந்தோ எதையுமே கேட்கவில்லை! யோசேப்பு பேசியதாக நாம் நற்செய்தியில் படிப்பதில்லை. ஏழு வியாகுலங்களை அனுபவித்தவர் யோசேப்பு.

1. மரியா தாயாகும் நிலையிலிருந்தபோது .. (மத் 1:18–21).

2. இயேசு பிறக்க இடம் கிடைக்காதபோது ... (லூக் 2:7).

3. மரியாவின் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப் பாயும் என்று சிமியோன் சொன்னபோது ... (லூக் 2:35).

4. ஏரோது குழந்தையைக் கொல்லத் தேடியபோது .... (மத் 2:13).

5. எகிப்துக்குப் பயணம் செய்தபோது ... மத் 2:14).

6. யூதேயாவை எரோதின் மகன் அர்க்கலா அரசாளுகின்றான் என்பதை அறிந்தபோது ... (மத் 2:22).

7. சிறுவன் இயேசு காணாமல் போன போது ... (லூக் 2:41–49).

யோசேப்பின் வாழ்க்கையில் எத்தனையோ குழப்பங்கள், ஏமாற்றங்கள், துன்பங்கள், துயரங்கள், ஆபத்துக்கள், விபத்துக்கள், சோதனைகள், வேதனைகள்! ஆனால் ஒருமுறைகூட அவர் யார் மீதும் குறை கூறியது கிடையாது, யாரிடமும் அவருக்கென்று எதையும் கேட்டது கிடையாது, யோசேப்பு ஒருபோதும் ஏமாற்றமடைந்ததில்லை! எதிர்பார்த்தால்தானே ஏமாற! எங்கே ஏமாற்றமில்லையோ அங்கே சண்டை சச்சரவு இருக்காது, பிரிவினை இருக்காது.

**இயேசு இன்றையக் குடும்பங்களுக்குத் தரும் அறிவுரை இதோ:**

என் தாய் மரியாவைப்போல வாழுங்கள்! என்னை கண்மணிபோல காத்த யோசேப்பைப்போல வாழுங்கள்! அனைவருடைய நலனுக்காகவும் உயிர்விட்ட என்னைப் போல வாழுங்கள்! அப்போது பிரிவு என்ற எண்ணமே உங்கள் மனத்தில் எழாது! உங்கள் குடும்பத்திலுள்ள எல்லாரும், குறிப்பாக கணவனும், மனைவியும் மலரும் – மணமும் போல, தேனும் சுவையும் போல, வானும் நிலவும் போல, கடலும் அலையும்போல இணைந்து வாழ்வீர்கள்! "

**மேலும் அறிவோம் :**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது (குறள் : 45)**

**பொருள் :** ஒருவர் குடும்ப வாழ்வு அன்பின் இயல்பையும் அறச்செயலையும் கொண்டிருக்குமானால், அவை முறையே பண்பாகவும் பயனாகவும் திகழும். கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து வாழ்ந்தால், அன்பே பண்பாகவும் அறமே பயனாகவும் விளங்கும்.

# புனித பதுவை அந்தோணியார் (ஆனி 13)

நற்செய்தியின் இறைமனிதர் உலகின் மாபெரும் புனிதர் திருச்சபையின் மறைவல்லுநர் காலத்தின் அறிகுறிகளைத் தெரிந்து திருமறையைப் பாதுகாத்த இறைவாக்கினர். நற்செய்தியைச் சொல்லாலும் செயலாலும் வாழ்வாலும் அறிவித்த இறைதூதர். ஏராளமான அற்புதங்கள் செய்தவர். திருச்சபையின் மாணிக்கமாய்த் திகழ்ந்தவரே புனித அந்தோணியார். இவர் ஐரோப்பாவிலுள்ள போர்ச்சுக்கல் நாட்டின் தலை நகரான லிஸ்பன் நகரில் 1195ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள் பிறந்தார். இவருடைய இயற்பெயர் பெர்தினாந்து ஆகும்.

அந்தோணியார் லிஸ்பன் மறைமாவட்ட பாடசாலையில் கல்வி கற்றார். குழந்தைப் பருவத்தில் படிப்பிலும், ஒழுக்கத்திலும், கூரிய நுண்ணறிவிலும் சிறந்து விளங்கினார். இறைபற்றும், ஞானமும் மிகுந்தவராகக் காணப்பட்டார். தினந்தோறும் தவறாமல் ஆலயம் சென்று திருப்பலியில் பங்கு கொண்டார். நீண்ட நேரம் இறைவனைப் போற்றுவதிலும், திருப்பாடல்களைப் பாடுவதிலும், செபிப்பதிலும் ஆர்வமாகச் செயல்பட்டார். திருப்பலியில் பீடச்சிறுவனாக பணிபுரிவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்.

ஒருமுறை நற்கருணைமுன் முழந்தாள்படியிட்டு செபித்துக் கொண்டிருந்தார். அவர் முன்பாக அலகை தோன்றி அவரைச் சோதிக்க முயன்றது. கலக்கம் ஏற்பட்டாலும் முழந்தாள்படியிட்டிருந்த சலவைக் கல்லில் பக்தியுடன் சிலுவை அடையாளம் வரைந்தார். அந்தச் சிலுவை அடையாளம் சலவைக் கல்லில் அப்படியே பதிந்து விட்டது. இதைப் பார்த்ததும் அலகை அலறி அடித்துக் கொண்டு ஓடியது. அந்த சலவைக்கல் சிலுவை அடையாளத்துடன் இன்றும் காணப்படுகிறது. இவ்வாறு சிலுவையின் மகத்துவத்தைத் தமது பன்னிரெண்டாம் வயதில் உணர்ந்து கொண்டார். இந்நிகழ்ச்சி வழியாகக் குருவானவராகப் பணியாற்ற விரும்பினார்.

அந்தோணியார் உலகை வெறுத்து ஒரு துறவியாக மாறத் தீர்மானித்தார். தூய அகுஸ்தினார் குருமடத்தில் சேர்ந்தார். தினந்தோறும் இறைவார்த்தையை வாசித்து, தியானித்து, வாழ்வாக்கி சான்று நல்கினார். இறைபாதத்தில் அமர்ந்து இறையன்பை நிறைவாகப் பெற்று சான்று பகிர்ந்தவர். கி.பி.1219ஆம் ஆண்டு குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்டார்.



பிரான்சிஸ் அசிசியாரின் துறவிகள் மீது அன்பும் மதிப்பும் கொண்டு பிரான்சிஸ்கன் துறவற சபையில் 1220ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 22ஆம் நாள் சேர்ந்தார். பெர்தினாந்து என்னும் இயற்பெயருக்குப் பதிலாக அந்தோணியார் என்ற பெயர் அவருக்குச் சூட்டப்பட்டது. அசிசியாரின் தாழ்ச்சி, ஏழ்மை, ஆன்மதாகம், கீழ்ப்படிதல் போன்ற நற்பண்புகள் அந்தோணியாரை மிகவும் கவர்ந்தன.

ஒருநாள் இரவு அந்தோணியார் தமது அறையில் வெகுநேரம் கண்விழித்து செபித்துக் கொண்டிருந்தார். விவிலியத்தைத் திறந்து வைத்திருந்தார். திடீரென பேரொளி அந்த அறையை நிரப்பியது. குழந்தை இயேசு விவிலியத்தின் மேல் நின்று அந்தோணியாரின் கழுத்தைக் கட்டித் தழுவினார். அந்தோணியார் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார். விண்ணகம் இந்த மண்ணுலகில் உண்டானது போல் உணர்ந்தார். புனிதர் குழந்தை இயேசுவைத் தனது மார்போடு சேர்த்து அரவணைத்து முத்தமிட்டார். அந்தோணியார் பேரானந்த நிலையில் மெய்மறந்து நின்றார். குழந்தை இயேசுவைக் கரங்களில் ஏந்தும் பாக்கியம் பெற்றவர். இதை திர்சோ என்பவர் நேரில் கண்டு சான்று கூறினார்.

அந்தோணியார் தமது வாழ்நாள் முழுவதும் அன்பையும், ஏழ்மையையும், தாழ்ச்சியையும், ஞானத்தையும் அணிகலன்களாக அணிந்திருந்தார். இதயத்தில் தாழ்ச்சிக்கு இடமளித்து இறைவனின் அருளையும் ஆசீரையும் நிறைவாகப் பெற்றுக்கொண்டார். இவரது வெற்றியின் இரகசியம் தாழ்ச்சியே. தம் சகோதரர்கள் முன்பாக தாழ்ச்சியோடு எளிமையாகவே வாழ விரும்பினார். ஏழ்மையில் எப்பொழுதும் மகிழ்ந்திருந்தார். நான் ஆண்டவரைப் பார்க்கிறேன், ஆண்டவர் என்னை வாஞ்சையோடு உற்றுப் பார்க்கிறார் அவரின் இரக்கம் நிறைவாக என்னில் பொழிகின்றது, நான் அவரிடம் செல்ல ஆவலோடு இருக்கிறேன். இறைவனிடம் செபித்தவாறே 1231ஆம் ஆண்டு ஜூன் 13 அன்று தமது 36ஆம் வயதில் இயற்கை எய்தினார்.



# எதிர்நோக்கின் திருப்பயணிகளாய்......

## இளையோர் பயணிப்போம்!

### எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் ஒளி தந்து வழிகாட்டிய உன்னதர்

அமெரிக்காவின் கலிபோர்னியா பகுதி. ஒரு நகரின் நான்கு சந்திப்புகள் தொடங்கும் இடம், ஓர் இருபது வயது இளைஞன் கண் கலங்கியபடி நின்று கொண்டிருந்தான். ஓர் இடத்திற்குத் தாம் வேலை தேடிச் சென்ற போது அங்கிருந்த நல்லெண்ணப் பெருந்தகை ஒருவர் அந்த இளைஞனுக்கு வேலை கிடைக்கும் இடத்தையும், அவ்விடத்திற்குச் செல்ல வேண்டிய குறிப்புகளையும் கூறி, வழிப் பயணத்திற்கு நூறு டாலர் பணத்தையும் கொடுத்தார்.

அவன் பசியுடன் இருந்ததால் ஓர் உணவகத்துக்குள் நுழைந்தான். எதிரே ஒரு குடும்பம். அவர்கள் அறுவர். முதியோர் மூவர், தம்பதியர் இருவர், ஒரு குழந்தை. அவர்கள் எல்லோரும் உணவைச் சந்தித்து இரு நாட்கள் ஆகியிருந்தன. அந்த இளைஞன் தன்னிடம் இருந்த நூறு டாலரையும் அவர்களிடம் கொடுத்துவிட்டு அந்த நாற்சந்திப்புச் சாலைகள் தொடங்கிய இடத்திற்கு நடந்தே சென்று விட்டான். தனக்கு உதவியவர் பெயர், போகவேண்டிய இடம், குறித்த விபரம் எல்லாவற்றையும் மறந்த நிலையில் அந்தக் குடும்பத்திடமே கொடுத்து விட்டான். இருந்தபோதிலும் யாரேனும் மீண்டும் வருவர், அவர்கள் மீண்டும் எனக்குத் தருவர் என்று எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

இவன் இருந்த தவிப்பு நிலையைக்கண்ட ஒரு முதுநிலைப் பெரியவர், அவனிடம் விசாரித்தார். அவன் தன்நிலை விளக்கமளித்தான். அவர் அவனிடம் « எனக்கும் உன்போன்ற பணியாள் ஒருவர் தேவை. உனக்குத் தயக்கம் இல்லாவிட்டால் என்னுடன் வா » எனத் தம் வாகனத்தில் ஏற்றிக்கொண்டார், அவர் காட்டிய வழியில் அவன் அருளிலும், பொருளிலும் அபார வளர்ச்சியடைந்தான்.

இது நடந்து இன்றுடன் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. பலகோடி டாலர் சொத்துக்கு உரிமையாளரான அவன் புனித லூர்து அன்னைக்கு நன்றி தெரிவிக்க பிரான்ஸ் நாட்டு லூர்தன்னை திருத்தலத்துக்கு குடும்பத்துடன் வந்துள்ளான். தனக்குப் புது வாழ்வளித்த மாமனிதர்களின் மலரடிகளை மனக்கண்முன் வைத்து வணங்கி மகிழ்ந்தான்.

### அழைக்கும் யூபிலி, அரவணைக்கும் தாய் மொழி !

வரலாற்றைச் செம்மைப்படுத்தும் வளமான நோக்கத்தில், அனைத்துலகத் திருஅவை, திருத்தந்தை பிரான்சிஸ் வழியாக 2025 ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவை யூபிலியாகக் கொண்டாட அழைப்பு விடுத்துள்ளது. அதுவும் 500, 100, 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்பட்டு வந்த யூபிலிகள், அண்மைக் காலமாக 25 ஆண்டுகள் நிறைவிலும் கொண்டாடத் தொடங்கப்பட்டு விட்டன. அதன் வெளிப்பாடுகள் "2025" ஆம் ஆண்டு யூபிலி. இந்த யூபிலியை “ பத்தோடு ஒன்று பதினொன்று” என்று கொண்டாட திருஅவை விரும்பவில்லை. அழகிய விருதுவாக்கினால் அறிமுகம் செய்துள்ளது.

அதாவது: எதிர்நோக்கின் திருப்பயணிகள் அத்துடன் தயாரிப்புத் திட்டங்களையும் அறிவித்துள்ளனர். அதன்படி : இரண்டாம் லத்திக்கான் சங்க ஏடுகளுள் நான்கினை, இந்த யூபிலி ஆண்டில் சிறப்பாகச் சிந்திக்க அழைப்பு விடுத்துள்ளது.

அவை 1. திருவழிபாடு.
2. திருச்சபை .
3. இறை வெளிப்பாடு.
4. இன்றைய உலகில் திருச்சபை.

இவற்றை தேசிய, மாநில, மறைமாவட்ட, பங்கு அமைப்புக்கள் பல அரிய திட்டங்களுடன் சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றன. (எ–டு) திருமறைச் சுவடியில் உள்ளதுபோல, கேள்வி – பதில் முறையில் தயாரிக்கப்பட்டு எளிதாக மக்களைச் சென்றடையச் செய்தி அவற்றிலிருந்தே போட்டிகளுக்கு ஏற்பாடு செய்வது, பயிலரங்கு வழியாக் கருத்துக்களைப் பரவலாக்குவது, வாழ்க்கை நெறிகளைக் காட்டி இறையாட்சிப் பயணத்தில் பயணிக்கத் தூண்டுவது. இப்படி பல விதங்களால் நம்மை அழைக்கும் யூபிலியைச் சிறப்பாகக் கொண்டாட அன்னைமரியா நமக்குத் தமது அரவணைப்பை அளவின்றிக் காட்டுகின்றார்.

### அன்னை மரியாவின் அரிய வழிகாட்டல்கள்

யூபிலியின் பலனை இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் குறைவின்றி அனுபவிக்க குரல் கொடுக்கும் அன்னை மரியா தமது வழிகாட்டலை நமது வாழ்வின் பல நிகழ்வுகள் வழியாக வெளிப்படுத்தி வருகிறார்.

### தம்மிடம் விளங்கிய இறையியல் நற்பண்புகள் வழியாக.

இறைவனின் அன்னையாவதற்கும், இயேசுவின் மீட்புப் பணியில் துணையாளராக விளங்கவும், இறைவன் தனக்களித்த உயரிய வாய்ப்பை அன்னைமரியா தகுந்த விதத்தில் பயன்படுத்திக் கொண்டார். குறிப்பாக எதிர்நோக்கு, அன்பு, நம்பிக்கை என்னும் நற்பண்புகளைத் தம் வாழ்வின் எல்லாநிலைகளிலும் வெளிப்படுத்தினார். இயேசுவின் தாயாகத் தாம் அழைப்புப் பெற்றபோது அதனை ஏற்றுக்கொண்ட பாங்கு, உள்ளத்து உறுதி, "உம்

இறைவனின் அன்னையாவதற்கும், இயேசுவின் மீட்புப் பணியில் துணையாளராக விளங்கவும், இறைவன் தனக்களித்த உயரிய வாய்ப்பை அன்னைமரியா தகுந்த விதத்தில் பயன்படுத்திக் கொண்டார். குறிப்பாக எதிர்நோக்கு, அன்பு, நம்பிக்கை என்னும் நற்பண்புகளைத் தம் வாழ்வின் எல்லாநிலைகளிலும் வெளிப்படுத்தினார். இயேசுவின் தாயாகத் தாம் அழைப்புப் பெற்றபோது அதனை ஏற்றுக்கொண்ட பாங்கு, உள்ளத்து உறுதி, "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்ற நம்பிக்கையுடனான நகர்வு, எதிர்நோக்குடனான அர்ப்பணிப்பும் ஒத்துழைப்பும்.

**2. உடனிருப்பும் – உடனேற்பும்**

உலகில் பல இடங்களில், பல கால கட்டங்களில், தம்மைக் காட்சிப்படுத்தி அச்சூழலில், அங்கு நிலவும் எதிர்ப்படும் தேவைகளுக்கேற்ப அரும் அடையாளங்கள் (புதுமைகள்) வழியாக மக்களோடு மக்களாக இருந்து அவர்கள் மனத்தளவில், வாயளவில் கேட்கும் மன்றாட்டுகளை உடனே ஏற்று, துன்ப துயரங்களிலிருந்து விடுவித்து, அங்கு புதிய வாழ்வு மலரவும், அதில் மக்கள் நிலைத்திருக்கவும் செய்து வரும் வரலாற்று பூர்வ செயல்பாடுகள் கொஞ்சமில்லை. லூர்து நகர் (பிரான்ஸ்), வேளாங்கன்னி (இந்தியா), பாத்திமா (போர்த்துக்கல்), மடு திருத்தலம் (இலங்கை) மற்றும் பல்வேறு இடங்களில் இந்த உடனிருப்பு தொடர்ந்து கொண்டுள்ளது. இங்கு காடசியளிக்கும் போதெல்லாம் அரிய வழிகாட்டல்களும் தொடர்கின்றன.

**"யூபிலி சொல்லும் செய்தி மாபெரும் வாழ்வு மாற்றம்.**

**ஒப்புரவு உருவாகுதலும், நிலை பெறுதலும்**

ஒவ்வொரு தனி நபரிலும், குடும்பத்திலும், குழுமத்திலும் மங்கி மறைந்த நிலையிலிருந்தும் உறவு நிலை மேம்படுத்தப்பட வேண்டும். சரி செய்யப்பட வேண்டும். இதற்கு ஒரு சாரரின் முயற்சியும் முன்னெடுப்பும் மட்டும் போதாது, ஏனென்றால் ஒப்புரவு இருவழிப்பாதை. எப்படிப்பட்ட சிந்தனையால், எத்தகைய செயல்பாடுகளால், இணைந்து சிந்தித்தால் இந்த ஒப்புரவு உருவாகி நிலை பெறவேண்டும்.

**மீட்பு நிச்சயப்படுத்தப்படுதல்**

கனவில் மட்டுமே இருந்து சொண்டிருந்த இஸ்ராயேல் மக்களின் மீட்பு, வாக்குறுதியின் கடவுள் வழியாக, விடுதலைத் தலைவர் மோசேயின் வழிநடத்தலில் நடைபெற்றது. எதிர்கொண்ட செங்கடல்கள் போய் மறைந்தன. தடுப்புச் சுவர்கள் தகர்ந்தன. அதுபோல இந்த யூபிலி ஆண்டில் நிலம், பொருள், ஆள், அடிமை என அனைத்தும் மீட்புப் பெறவேண்டும், அதற்கேற்ற மனமாற்றமும் இறுக்க நிலையிலிருந்து இறங்கி வரும் மனிதநேய நிகழ்வுகளும் சாமானிய மக்களுக்கு மீட்பை வழங்குவதாக அமையவேண்டும்.

**எதிர்நோக்கு விரியட்டும்! எப்போதும் கைகூடட்டும்.**

என்னதான் திருஅவை அழைப்புக் கொடுத்தாலும், நம்பிக்கையாளர்களின் நல் மனங்கள்தான் யூபிலியை வாழ்வியல் நிலைக்கு உட்படுத்தும் வாய்ப்புகளை வழங்க முடியும். குறிப்பாக, தாராள மனம், தளராத தவம், தானதருமம், இல்லாரை ஏற்பு, கல்லார்க்குக் கனிவு, மாற்றுத் திறனாளிகளை ஆற்றுப்படுத்தல், உடல் சார்ந்த ஏழு, மற்றும் உள்ளம் சார்ந்த ஏழு இரக்கச் செயல்களை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றில் சாதாரண மக்களின் எதிர்நோக்கு நடைபெறட்டும். அவர்கள் தங்களது எதிர்கால நல்ல திட்டங்கள் கைகூடியதால் கடவுளை நோக்கி நன்றிக் கைகளைக் குவிக்கட்டும்.

- ♦ எதிர் நோக்கின் திருப்பயணிகளாய் இளையோர் பயணிப்போம்
- ♦ நற் சிந்தனைகள் நற்செயல்களை விழைவிக்கும்.
- ♦ நல் வாசிப்புகள் நற்சிந்தனைகளை உருவாக்கும்.
- ♦ நல் எண்ணங்கள் நல் வாசிப்புக்களைத் தூண்டும்.
- ♦ நல்ல தூண்டுதல்கள் எப்போதும் நலம் நாடுதலை உருவாக்கும்.

இவை அனைத்தும் நிறைந்த பயணமே, எதிர்நோக்கின் திருப்பயணம். இந்தப்பயணம்

- இறையாட்சியைத் தோற்றுவிக்கும்,
- இறையாட்சியை எல்லார்க்கும் காட்டும்.
- இறையாட்சியை நிலைப்படுத்தும்.
- இறைவனைச் சென்றடைய வழிகாட்டும்.

மாபெரும் வாழ்வு மாற்றத்தில் உருவாகும் புதுவாழ்வு, திருவாழ்வு, நிறைவாழ்வின் வழியாக நிலைவாழ்வை உரிமையாக்கும்.

யூபிலியின் காரணமாகிய கிறிஸ்துவின் பிறப்பு ஒரு சாதாரண வரலாற்று நிகழ்வு அல்ல,

- தந்தை இறைவனின் தயவின் வெளிப்பாடு
- மகன் இயேசுவின் தானத்தின் வெளிப்பாடு.
- ஆவியின் ஆற்றலின் வெளிப்பாடு.
- அன்னை மரியாள் இசைவளிப்பின் வெளிப்பாடு.

இவை அனைத்தும் யுபிலி வழி நாம் பெறும் அருள்வாழ்வின் வெளிப்பாடு என்றால் மிகையாகாது.



# கடவுள் விரும்பும் பலி

எபிரேயர் 10: 1–10 திருப்பாடல் 40: 1, 3ad, 6–7a, 9, 10 (7a, 8a) மாற்கு 3: 31–35

## கடவுளின் திருவுளம் நிறைவேற்றுவோம்:




கடவுளுக்கு நாம் எரிபலிகளையும், பாவம் போக்கும் பலிகளையும் செலுத்தவேண்டுமா? என்றால் நிச்சயமாக இல்லை. ஏனெனில், திருப்பாடல் 40 இல் அதன் ஆசிரியர், “ பலிகளையும் காணிக்கைகளையும் நீர் விரும்புவதில்லை எரிபலிகளையும் பாவம் போக்கும் பலிகளையும் நீர் கேட்பதில்லை” (6) என்கிறார் எனில், கடவுள் விரும்பும் பலி என்ன? என்ற கேள்வி எழலாம். இதற்கான பதில் தொடர்ந்து வருகின்ற வார்த்தைகளில் இடம்பெறுகின்றது. “ என் கடவுளே! உமது திருவுளம் நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்” என்கிற வார்த்தைகள் கடவுளின் திருவுளம் நிறைவேற்றுவதே கடவுள் விரும்பும் பலி என்ற செய்தியை நமக்குத் தருகின்றன.

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட வாசகம் முற்கால பலிகளையும் இயேசு செலுத்திய பலியையும் பற்றிக் கூறுகின்றது. முற்காலத்தில் குருக்கள் விலங்குகளைப் பலியாகக் கொடுத்தார்கள். அவை மனிதர்களின் பாவங்களைப் போக்கவில்லை. ஆண்டவர் இயேசு உலகின் பாவங்களைப் போக்கத் தம்மையே பலியாகத் தந்தார். மட்டுமல்லாமல், அவர் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றி (மத் 26: 39) மிக உன்னத பலியைச் செலுத்தினார். ஆகையால், கடவுள் விரும்பும் பலி எரிபலி அல்ல, மாறாக, அவரது திருவுளத்தை நிறைவேற்றுவதே!

நற்செய்தியில், இயேசு மதி மயங்கிவிட்டார் அவரைப் பெயல்செபூல் பிடித்திருகின்றது என்கிற செய்தியைக் கேள்விப்படும் அவரது தாயும் அவரது சகோதரர் சகோதரிகள் அவரைப் பார்க்க வருகின்றார்கள். அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு இயேசு, கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே தன் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார் என்கிறார்.

இயேசு எப்போதும் இரத்த உறவுகளைக் கடந்து செயல்பட்டார். அதனால் அவர் கடவுளின் திருவுளத்தை நிறைவேறுபவரே தன்னுடைய உண்மையான உறவினர் என்கிறார். இயேசுவின் இவ்வார்த்தைகள், ஒருவர், யாராக இருந்தாலும் அவர் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றினால், அவர் அவருக்கு உறவினர் ஆவார் என்பதையும், ஒருவேளை ஒருவர் இயேசுவின் இரத்த சொந்தமாகவே இருந்தாலும், அவர் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றாதபோது, அவர் யாரோ ஒருவர் தான் என்கிறார்.

எனவே, நாம் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதே, அவர் விரும்பும் பலி என்ற உண்மையை உணர்ந்து, அதன்படி வாழ்வோம்.

### கடவுளின் திருவுளத்தை எப்படி அறிவது?

சார்லஸ் ஸ்விண்டோல் எழுதிய மிகப் பிரசித்தி பெற்ற ஒரு நூல், “ The Mystery of God’s will. இந்த நூலில் அவர் கடவுளின் திருவுளத்தை அறிந்து கொள்வதற்கு நான்கு விதமான வழிமுறைகளைச் சொல்கின்றார்.

1. இறைவார்த்தை,
2. தூய ஆவியாரின் உந்துதல்,
3. ஞானம் நிறைந்தவர்களின் ஆலோசனை.
4. அமைதியைத் தருவதற்கான வாக்குறுதி.

இந்த நான்கும் ஒன்றோடொன்று ஒத்துப் போக்கின்றபோது அது கடவுளின் திருவுளம் என உணர்ந்துகொள்ளலாம். நாம் கடவுள் திருவுளத்தை அறிந்து, அதன்படி நடக்கும்போது கடவுள் மிகவும் மகிழ்கின்றார். இதனை நாம் மறந்துவிட வேண்டாம்.

### ஆன்றோர் வார்த்தை:

‘ கடவுளின் திருவுளத்தை அறிவது ஞானம் நிறைந்த செயல். அதைச் செயல்படுத்துவது மிகப்பெரிய சாதனை” – ஜார்ஜ் டபிள்யூ ட்ரூட்

### தீர்மானங்கள்:

**I. வெளி ஆடம்பரங்களைத் தவிப்போம் கடவுளை உள்ளார்ந்த விதமாய் வழிபடுவோம்.**

**II. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சி காண்போம்.**

**III. உயிர் பலிகளைத் தவிர்த்து, அவற்றை அன்பு செய்வோம்.**

– மறைத்திரு. மரிய அந்தோணிராஜ், பாளையங்கோட்டை மறைமாவட்டம்.

## முட்டாள்கள் தினம் – இது உருவானது எப்படி?




உலக அளவில் மகளிர் தினம், நண்பர்கள் தினம், தந்தையர் தினம், காதலர் தினம், குழந்தைகள் தினம், தொழிலாளர்கள் தினம் என்று மக்களுக்குப் பலவிதமான தினங்கள் இருப்பது போலவே முட்டாள்களுக்கும் என்று ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்தவரை முட்டாள்களாக்க முனையும் ' முட்டாள்தனமான அறிவாளிகளின் தினம்" என்று இத் தினத்தைக் கூறினாலும் பிழையாகாது. ஆம் நாமெல்லாம் பாடசாலைப் பருவத்தில் சக நண்பர்களிடம், வீட்டில் உள்ளவர்களிடம் அன்று ஏமாறாமல் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்ட நாட்களை மறக்க முடியாது.

அதேபோல ஒருவரையாவது ஏமாற்றி விட வேண்டும் என்ற விளையாட்டுத்தனமும் அதில் இருந்த ஆர்வமும் மறக்க முடியாது. உன் சட்டையிலே என்ன கறை? உன் பின்னே பாம்பு..? என்று ஆரம்பித்து பல ஏமாற்றுக் கேள்விகளை நண்பர்களிடம் சொல்லி...ஏமாற்றி விளையாடி இருப்போம் அதுதான் இந்த ஏப்ரல் முதல் திகதியாகும். ஏமாற்றுவதையும் ஏமாறுவதையும் சிரித்துக்கொண்டே ஏற்றுக்கொள்ளும் ஒரு தினம்.

**உலகம் முழுவதும் பலரைக் குழந்தைப் பருவத்துக்கு அழைத்துச் செல்லும் இத் தினம் எப்படி உருவானது?**

1500–களில் ஐரோப்பியர்கள் கடைப்பிடித்த ஒரு பழக்கமாக ஏப்ரல் 1 கூறப்படுகிறது. அப்போது அந்த நாளின் பெயர் ஏப்ரல் மீன்கள் தினம். ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் பிரான்ஸில் உள்ள ஆறுகளிலும் நீரோடைகளிலும் நிறைய மீன்கள் இருக்குமாம். அதனால் அந்தச் சமயத்தில் மீன்பிடிப்பது மிகவும் சுலபம். ஆகையால் மீன்கள் ஏமாறும் தினமாக ஏப்ரல் 1 கருதப்பட்டது. காலப்போக்கில் மனிதர்களை ஏமாற்றும் தினமாக அது மாற்றம் கண்டு ஏப்ரல் 1–ம் திகதி முட்டாள்கள் தினம் என ஆனது. திருவிழாவைப் போல் நடைபெறும் இந்தக் கொண்டாட்டங்களின்போது ஒருவருக்கொருவர் பரிசுப் பொருட்களையும் அன்பளிப்புகளையும் வழங்கி தங்கள் அன்பை வெளிப்படுத்திக் கொள்வார்கள். இந்த ஒரு வாரக் கொண்டாட்டத்தின் இறுதி நாளான ஏப்ரல் முதலாம் திகதி பெருவிருந்துடன் புத்தாண்டு விழா நடைபெறும். 1562–ம் ஆண்டில் போப் கிரிகோரி புதிய ஆண்டுத் தொடக்கத்தை நடைமுறைப்படுத்தும்படி ஆண்டுத் தொடக்க நாளாக ஜனவரி 1–ம் திகதியை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது போப்பின் அறிவிப்பை நம்பாதவர்கள் ஏப்ரல் 1–ம் திகதியையே புத்தாண்டுப் பிறப்பாகக் கொண்டாடினர். இந்தப் புதிய புத்தாண்டு தினத்தை ஐரோப்பிய தேசங்களும், அவற்றின் மக்களும் உடனே ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குச் சில காலம் எடுத்தது. புதிய வழக்கத்தை ஏற்றுக்கொண்டு ஜனவரி முதலாம் திகதியை புத்தாண்டாகக் கொண்டாடத் தொடங்கிய மக்கள், இந்த பழைய வழக்கத்தைப் பேணி ஏப்ரல் மாதம் முதல் திகதியில் புத்தாண்டைக் கொண்டாடுபவர்களை ஏப்ரல் முட்டாள்கள் என்று அழைத்தார்கள். இதிலிருந்து ஏப்ரல் முட்டாள்கள் தினம் ஆரம்பமாயிற்று என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.




1466–ம் ஆண்டு மன்னன் பிலிப்பை அவரது அரச சபை விகடகவி, பந்தயம் ஒன்றில் வென்று மன்னனையே முட்டாளாக்கிய நாள் ஏப்ரல் முதலாம் தினம் என்றும் கூறப்படுகிறது. ரோமாபுரியில் கிறிஸ்தவர்கள் அதிகாரத்திற்கு வந்தபோது, பழமையான கொண்டாட்டங்களை மாற்றியதோடு அவற்றில் ஒரு சிலவற்றை வேடிக்கை, வினோத கொண்டாட்டங்களுக்குரிய நாளாக மாற்றினர்.

இந்த மாற்றங்களில் நம்பிக்கை இல்லாமலிருந்த இவர்களை கேலியும் கிண்டலும் செய்து விளையாட்டாக முட்டாளாக்கி ஏமாற்றும் போக்கில் ஈடுபட்டனர். இதுவே நாம் இன்றைக்கு வேடிக்கையாய் முட்டாள்களாக்கி மகிழ்கிற நாளாகத் தொடர்ந்திருக்கிறது எனலாம். ஜனவரி மாதம் 1–ம் திகதியைப் புத்தாண்டாக ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள், அல்லது மறந்தவர்களுக்கு முட்டாள்தனமான பரிசுகளை அனுப்பினர். பெரிய பரிசுக் கூடைகள் போன்று வடிவமைத்து உள்ளே குதிரை முடி, பழைய குப்பை என்று நிரப்பிக் கொடுத்து ஏமாற்றுதல் போன்ற ஏமாற்று வேலைகளைச் செய்து ஏமாற வைத்தனர்.இத்தகைய கேலிக்கூத்துகள் சுற்றிச் சுழன்று பிரான்ஸிலிருந்து இங்கிலாந்துக்கும் அங்கிருந்து அமெரிக்காவுக்கும் "ஏப்ரல் பூல்" விரிந்து பரவி இருக்கிறது.

பிரெஞ்சுக் குழந்தைகள்கூட காகிதத்தில் மீன் போன்று செய்து தனது நண்பர்களின் முதுகில் ஒட்டி அனுப்பிக் கேலி செய்திருக்கின்றனர். இப்படி முதுகில் மீனோடு திரிகிற குழந்தைகளைப் பார்க்கும் குழந்தைகள் "ஏப்ரல் மீன்" என்று அழைத்துக் கேலி செய்திருந்திருக்கின்றனர்.

ஏப்ரல் முதல் திகதி பல வேடிக்கைகள் மட்டுமல்லாது பல வினைகளும் வந்துள்ளன. முட்டாள்களான அறிவாளிகள் தினம், வேடிக்கையாய் முட்டாள்களாக்கி மகிழ்கின்ற நாளாக தொடர்கிறது.இவ்வருடத்திற்கான ஏப்ரல் ஃபூல் தினம்... இன்று.....முடிந்தவரை யாரிடமும் ஏமாறாமல் இருந்து கொள்ளுங்கள்..




## சிங்க தோல் போர்த்திய கழுதை

ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டின் பக்கத்துக் கிராமத்தில் இருந்து ஒரு கழுதை வழி மாறி அந்த காட்டிற்குள் வந்தது. அந்த கழுதை வரும் வழியில், பல விலங்குகள் பயத்துடன் ஓடிக்கொண்டிருந்ததாம். அதில் ஒரு மானும் இருந்தது.

அப்பொழுது அந்த கழுதை மானிடம் ஏன் அனைவரும் இப்படி வேகமாக பயத்துடன் ஓடி செல்கின்றன? என்று கேட்டது. அதற்கு மான் « இந்த காட்டில் சிங்கம் ஒன்று உள்ளது. அதனை கண்டுதான் நாங்கள் அனைவரும் இப்படி ஓடுகின்றோம் » என்று கூறிவிட்டு சென்றது. இருப்பினும் கழுதை சிங்கத்தின் வீரத்தை தெரிந்து கொண்டே அந்த காட்டிற்குள் சென்றது. சிறிது தூரம் கடந்து சென்றதில் கழுதை களைப்படைந்து விட்டது. பின் கழுதை அந்த காட்டிற்குள் ஒரு ஓடையைப் பார்த்தது.

பின் கழுதை தண்ணீர் அருந்த அந்த ஓடைக்கு சென்றது. அங்கே சில வேட்டைக்காரர்கள் தாங்கள் வேட்டையாடிய மான், புலி, சிங்கம் போன்ற விலங்குகளின் தோலை அங்கிருந்துப் பாறைகள் மேல் உலர வைத்திருந்தனர்.

அதனைப் பார்த்த கழுதைக்கு ஒரு ஆசை வந்தது. உடனே ஒரு சிங்கத்தின் தோலை எடுத்துத் தன் உடம்பின் மேல் போர்த்திக் கொண்டது. அந்த கழுதையும் பார்ப்பதற்கு சிங்கம் போலவே இருந்ததினால், மற்ற விலங்குகளும் கழுதையை சிங்கம் என்று நினைத்து பயந்து ஒதுங்கி சென்றன. மிருகங்கள் அனைத்தும் தன்னைப் பார்த்துப் பயந்து மரியாதையாக வழி விட்டு ஒதுக்குவதை பார்த்த கழுதைக்கு, கர்வம் தலைக்கு ஏறியது. கழுதை அந்த காட்டில் உலாவிக் கொண்டிருந்தது,

அப்பொழுது அங்கு ஒரு நரியை பார்க்கிறது. சரி இந்த நரியையும் பயமுறுத்தலாம் என்று நினைத்து, நரியின் அருகில் சென்றது. நரியும் பயத்தில் நடுங்கிக்கொண்டே “ சிங்க ராஜா, நான் தெரியாமல் இந்த பக்கம் வந்துவிட்டேன், இனி நான் இந்த காட்டிற்கே வரமாட்டேன் என்று கழுதையிடம் கூறியது. கழுதையும் சிங்கத்தை போல் கர்ஜிக்கணும்னு நினைத்து “ ங்கெ ங்கெ” ன்னு கத்தியது. ஆகவே அதோட குரல் அது கழுதையினு நரிக்கு காட்டிக் கொடுத்தது. அதன் பிறகு அந்த கழுதைய நரி மதிக்கவே இல்லை. அதுவும் இல்லாம “ எனக்கு கோவம் வருவதற்குள் இங்கிருந்து சென்றுவிடு” என்றது. நரி கழுதையிடம், நீ சிங்கம் போன்று வேஷம் போட்டாலும் உன்னுடைய உண்மையான குணத்தை உன்னால் மாற்ற முடியாது என்று கூறியது.

கழுத்தையும் அவமானத்தில் தலைகுனிந்தது. அதன் பிறகு தனது வேஷத்தை கலைத்துவிட்டு, தனது உண்மையான உருவத்தில் நாம் நாமாக இருக்கும் போதுதான் மதிப்படைகிறோம். அடுத்தவர் போல வேஷம் போட்டாலோ அல்லது மற்றவர்கள் போல நடந்து கொள்வதாலோ அவமானம் தான் மிஞ்சும். ஆகவே நாம் நாமாகவே இருப்போம்..!

## குட்டிக்கதை





பண்ணையார் ஒருவர் தன் பண்ணையில் விளைந்த வாழை மரத்திலிருந்து சுமார் நூறு பழங்கள் உள்ள பெரிய வாழைக்குலையை அறுத்தார்.

தன் வேலைக்காரனை அழைத்து « இந்த வாழைக்குலையை கோயிலுக்கு கொண்டு போய் கொடுத்துவிட்டு வா » என்றார். வேலைக்காரனும் அவ்வாறே செய்தான். அன்று இரவு பண்ணையாரின் கனவில் தோன்றிய இறைவன் « நீ அனுப்பிய ஒரு வாழைப்பழம் கிடைத்தது » என்றார். திடுக்கிட்ட பண்ணையார் இறைவா « நான் நூறு பழங்களை அல்லவா அனுப்பினேன் » என்றார். இறைவன் « இல்லை ஒரு பழம்தான் எனக்கு வந்து சேர்ந்தது » என்றார்.

விடிந்ததும் பண்ணையார் வேலைக்காரனை அழைத்து « நான் கொடுத்த வாழைப்பழங்களை முழுமையாக கோயிலில் கொண்டு சேர்த்தாயா » என்றார். அவன் « ஆம் » என்றான். பண்ணையாருக்கு கோபம் வந்துவிட்டது. அவர் வேலைக்காரனை வேகமாக அறைந்தார். « உண்மையைச் சொல் இல்லை என்றால் அடித்தே கொன்று விடுவேன் » என்றார். அவன் « உண்மையைச் சொல்லி விடுகின்றேன். வழியில் ஒருவன் பசியாய் இருக்கிறது என்றான். நான் பரிதாபப்பட்டு அவனுக்கு ஒரு பழத்தைக் கொடுத்தேன் மீதமுள்ள எல்லாப் பழத்தையும் கோவிலுக்குக் கொடுத்துவிட்டேன் » என்றான்... பண்ணையாருக்குப் புரிந்து விட்டது.

ஏழைக்குக் கொடுத்த பழமே இறைவனுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. கோயிலுக்குக் கொடுத்த பழம் போய்ச் சேரவில்லை என்று. கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நீ ஏதாவது கொடுத்தால் அது ஏழைகளுக்குப் போய்ச் சேராது, ஏழைகளுக்கு நீ ஏதாவது கொடுத்தால், அது இறைவனிடம் போய்ச் சேர்ந்து விடும்.

கோயிலில் போய்க் கொடுப்பதும் ஏழைகளுக்குக் கொடுப்பதும் ஒன்றா என்று சிலர் கேட்கலாம். ஏழைகளின் வயிறு அஞ்சல் பெட்டி. இறைவனுக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை இதில் போட்டால் இறைவனுக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

**“ ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்”**

## டொன்போஸ்கோ திருவிழா - 2025












## வீடு இல்லாதவர்களுக்கு

## உணவு சுகாதாரப் பொருட்கள் உதவி



## இளையோரின் 'தேடல்கள்' என்ற புத்தக வெளியீடு






4ம் பக்கத் தொடர்ச்சி

சிச்சோ அடிகளார் ஸ்பெயின் நாட்டின் மற்றிட் நகரில் டிசம்பர் 4ஆம் திகதி 1963இல் பிறந்தவர். 1982இல் அமலம ரித் தியாகியாக வாக்குத்தத்தம் மேற்கொண்டு, மேமாதம் 21ஆம் திகதி 1988இல் குருவாக திரு நிலைப்படுத்தப்பட்டார்.

**பதின்நான்காவது உயர் தலைவர்:**

சிச்சோ அடிகளார் குருவாகியபின், ஸ்பெயின் அ.ம.தி. களின் மாகாணத்தில் அழைத்தல்கள் ஊக்குவிப்பாளராகவும் (1988–1992), அ.ம.தி.க ளின் ஸ்பெயின் உயர் குருமடத்தின் மேலாளராகவும் (1996–1999) அ.ம.தி.களின் ஸ்பெயின் மாகாண முதல்வராகவும் (2000–2004), ஐரோப்பாக் கண்டத்தின் அ.ம.தி.களின் உயர் தலைவரின் ஆலோசகராகவும் (2004–2016) பணியாற்றியவர்.

மிடிரரேனியன் பகுதியின் தென் சகார பணிப் பொறுப்பை மேற்கொண்டிருந்த வேளை (2017–2022) அ.ம.தி.களின் 37வது உயர் பொதுச்சபை மாநாடு 2022இல் உரோமை நகரில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 14வது உயர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சகாராப் பாலைநிலப் பிரதேசத்தில் இஸ்லாமியரிடையே நற்செய்திப்பணி புரிந்து கொண்டிருந்தபோது உரோமைக்கு அழைக்கப்பட்டவர் சிச்சோ அடிகளார்.

**உயர் பொதுச்சபைக்கு வெளியே தெரிவான முதல்தலைவர்!**

இதுவரையில் அ.ம.தி.களின் உயர் பொதுச்சபையில் பங்கெடுத்தவர்கள்தான் இதுவரையில் உயர் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக் கின்றார்கள். உயர் பொதுச்சபையில் பங்கேற்காது தெரிவு செய்யப்பட்ட முதல் உயர் தலைவர் பேரருட்திரு சிச்சோ அடிகளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்பான்யம் ஆங்கிலம் பிரென்சு இத்தாலி ஆகிய மொழிகளைச் சரளமாகக் பேச எழுதக் கூடியவர். ஏற்கனவே அ.ம.தி.களின் உயர் மூன்று உயர் பொதுசபை யில் பங்குபற்றி இருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ஓர் உண்மையான இயேசுவின் சீடன்:**

மிகவும் எளிமையும் சாந்தமும் பொறுமையும் கனிவும் அன்பும் உடையவர். ஆன்மீக தாகமும் நற்செய்தியைப் பரப்புவதில் ஆர்வமும் கொண்டவர்.

“ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க” என்ற விருதுவாக்கை அமலமரித்தியாகிகளின் சபைத் நிறுவுனர் புனித யூஜீன் டி மகனட் கொண்டிருந்தார்.

இவ்விருதுவாக்கைத் தானும் வாழ்ந்து, தன் சகோதர துறவிகளையும் வாழ ஊக்குவிக்கின்ற ஓர் உன்னதமான மனிதர்தான் பேரருட்திரு சிச்சோ அடிகளார்.

ஏழைகளையும் மிகவும் தூர இடங்களில் வசதி வாய்ப்புக்கள் இன்றி பல சவால்களின் மத்தியில் பணிபுரி யும் அ.ம.தி.களைச் தேடிச்சென்று அவர்களோடு தனது அக்கறையையும் அன்பையும் உடனிருப்பையும் பகிர்ந்து கொள்ளுகின்ற ஓர் உண்மையான இயேசுவின் சீடன்தான் ‘சிச்சோ’ அடிகளார்.

**அ.ம.தி. களின் உலகளாவிய நிலை:**

இன்று, உலகம் பூராகவும் 3200 அமலமரித்தியாகிகள் 70 நாடுகளில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களின் 01 கருதினாலும், 07 பேராயர்களும், 35 ஆயர்களும், 02 அப்போஸ்தலிக்க பரிபாலகர்களும் அடங்குவர். ஆபிரிக்கா–மடகஸ்காரர், இலத்தீன் அமரிக்கா, ஆசியா–ஓசியானியா, கனடா–அமரிக்கா, ஐரோப்பா எனக் கண்டங்களாக வகுக்கப்பட்டு சபையின் உயர் தலைவரின் பொறுப்பில் சபை நிருவகிக்கப் படுகின்றது.

அ.ம.தி.கள் குழுமத்தில் இணைந்து கொள்ளுகின்றவர்கள் இன்று அதிகமாக ஆபிரிக்க ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பது இங்கு நோக்கத்தக்கது. அ.ம.தி.கள் சபையினர் மட்டுமல்ல, அனைத்து துறவற சபையினரும் இவ்வாறான நிலையினை–யே எதிர்கொள்கின்றனர்.

**புனித யூஜின்தாமே அனுப்பிவைத்தார்:**

அப்போதையை யாழ். மறைவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கொறனஸ் பெற்றாக்கினி ஆண்டகையின் அழைப்பில் அருட்தந்தை ஸ்ரிபன் சமேரியாவின் தலைமையில் நான்கு அ.ம.தி.கள் இலங்கையை நவம்பர் 28ஆம் திகதி 1847இல் வந்தடைந்தனர்.

அ.ம.தி.களின் நிறுவுனர் புனித யூஜீன் டி மசனட் அவர்களே இலங்கைக்கு அ.ம.தி.களை அனுப்பி நற்செய்திப்பணி ஆற்றியிருக்கின்றார் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

நிறுவுனர் ஆயர் யூஜீன் டி மசனட் ஏறக்குறைய 200 கடிதங்களை இலங்கையில் பணியாற்றிய அ.ம.தி.களுக்கு எழுதியிருப்பதும் ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

இலங்கையில் மறைமாவட்டங்களைக் கட்டி எழுப்பி மேய்ப்புப்பணி ஆற்றியமை, பங்குகளை நிருவகித்து மேய்ப்புப்பணி செய்தமை, சுதேச திருநிலையினரை உருவாக்கியமை, ஆலயங்கள் திருத்தலங்கள் போன்றவற்றை கட்டியெழுப்பியமை, கல்விச் சாலைகளையும் பாடசாலைகளையும் உருவாக்கிக் கல்வியறிவை ஊட்டியமை, சீர்திருத்தப் பள்ளிகள்–ஏழைகள் கைவிடப்பட்டோருக்கான இல்லங்கள்–மாணவர் விடுதிகள் நடத்தியமை, வைத்தியசாலை–சிறைச்சாலைப் பணிகள், இளையோர்–சிறுவர்களுக்கான பணிகள், சமூக நலப்பொதுப் பணிகளென காலத்தின் அறிகுறிகளைக் கண்டறிந்து பல்வேறுபட்ட பணிகளை அ.ம.தி.கள் அன்று தொட்டு இன்றுவரை ஆற்றி வருகின்றனர்.

மிகுதி மறு இதழில்

# அன்பின் இனிமையை சுவைப்போம்

**திருத்தூதர் பணிகள் 14:21–27 திருவெளிப்பாடு 21:1–5 யோவான் 13:31–35**

இந்த உலகில் விலை மதிப்பில்லாமல் கிடைப்பது அன்பு ஒன்று தான். ஆனால் எளிதில் கிடைப்பதனாலோ என்னவோ அதன் மதிப்பு யாருக்கும் தெரிவதில்லை. நாம் அனைவரும் இயேசுவைப்போல அன்பு செய்து வாழ வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இயேசுவும் என்னைப் போல அன்பு செய்யுங்கள். நான் அன்புசெய்தது போல நீங்களும் அன்பு செய்யுங்கள் என்கின்றார். நீங்கள் ஒரு–வர் மற்றவரிடம் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்வார்கள். என்கின்றார்.

அன்பு மிக இனிமையானது. எனவே தான் அதனை மிகச்சிறப்பான கட்டளையாக இயேசு தம் சீடர்களாகிய நமக்கு கொடுக்கின்றார். அன்பு கொடு மரியாதை கொடு என அடுத்தவரிடம் பிச்சையெடுக்கும் பிச்சைக்காரனாய் இருக்காதே என பணிக்கின்றார். மாறாக கேட்காமலேயே அள்ளிக் கொடுக்கும் செல்வந்தனாய் இருக்க வலியு றுத்துகிறார். அன்பும் மரியாதையும் கேட்டுப் பெற வேண்டியவை அல்ல, கொடுத்துப்பெற வேண்டியவை. கேட்டால் கிடைக்காது இவை இரண்டும். கொடுத்தால் மட்டுமே இரட்டிப்பாக கிடைக்கும். நம்மை அன்பு செய்பவர்களை மட்டுமல்லாது, வெறுப்பவர்களையும் நாம் அன்பு செய்ய வேண்டும். உதாரணம் நம் இயேசு. அவர் தன்னை காட்டிக் கொடுத்தவன், விட்டு ஓடியவர்கள், மறுதலித்தவர்கள், பழித்துரைத்தவர்கள் என அனைவரை யும் அன்பு செய்கின்றார். நாமும் அவர் " போல " அன்புசெய்ய வேண்டும். கொடுத்துப் பெறுவோம் அன்பை . எங்கே அன்பு குறைகிறதோ அங்கு குறைகள் பெரிதாய் தெரியும். அன்பு நிறைவாய் இருந்தால் அங்கு குறைகளுக்கு இடமே இல்லை. அவர் தன்னை காட்டிக் கொடுத்தவன், விட்டு ஓடியவர்கள், மறுதலித்தவர்கள் பழித்துரைத்தவர்கள் என அனைவரையும் அன்பு செய்கின்றார்.

அன்பு என்பது ஆழ்கடல் போன்றது. கரையில் தேடினால் சிப்பிக்களும் கிளிஞ்சல்களும் தான் கிடைக்கும் . ஆழமா ய்த் தேடினால் தான் முத்துக்கள் கிடைக்கும். (சில சமயம் மூச்சும் திணறும்). நாம் பெரும்பாலும் மேலோட்டமான அன்பை சிலர் மேல் செலுத்திவிட்டு, அதை விட குறைவான அன்பை அவர்களிடமிருந்து பெற்று, அதனையே முழுமை யான அன்பு என எண்ணி நிறைவு அடைகிறோம். விளைவு அவர்கள் நம்மை விட்டு பிரிந்தாலோ சிறு வார்த்தைகள் சொன்னாலோ உடனே அந்த அன்பு மறைந்துவிடுகிறது. அன்பு இனிமையானது அது தன்னையும் தன்னைச்சுற்றி உள்ளவர்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளும். எல்லோருக்கும் எல்லாமுமாக இருக்கும்.

ஆழ்கடல் அன்பை உணர முதலில் மூச்சடக்க பயிற்சிக்க வேண்டும். முத்துக்கள் இருக்கும் இடம் அறிய வேண்டும். இல்லாத இடத்தில் மூச்சடக்கி ஒரு பயனுமில்லை. பெரும்பாலானோர் கரையில் முத்துக்களைத் தேடி கிளிஞ்சல்களையும் சிப்பிக்களையும் முத்துக்கள் என்றெண்ணி வாழ்க்கையை வாழ்கின்றனர். முத்துக்கள் போலத் தெரியும் கற்களை நம்பியும் ஏமாறுகின்றனர். உண்மையான அன்பு எதுவென உணர்ந்து அதன்படி வாழ முயற்சிப்போம்.

எல்லையின்றி தன் அன்பை பிறருக்கு அள்ளிக் கொடுக்கும். நறுமணம் போல எங்கும் பரவி மனங்களை மகிழச் செய்யும். நமது அன்பு அப்படிப்பட்ட அன்பாக இருக்க அருள் வேண்டுவோம். எல்லையின்றி பரவும் அன்பாக, நமது அன்பு பிறருக்கு மகிழ்வை நன்மையைத்தரக் கூடியதாக இருக்க முயல்வோம்.

அன்பு என்பது மனித உணர்வு. மனிதர்கள் பாரபட்சமின்றியும் திறந்தநிலையிலும் இருக்கும் ஒரு கணத்தில், அன்புடன் காண்பார்கள். பெரும்பாலான மனிதர்கள் தங்களைப் பற்றி இறுமாப்புடன் இருக்கிறார்கள். அவர்கள் அன்பை உணரவேண்டும் என்றால், அவர்கள் ஒருவருடன் தங்களை அடையாளப் படுத்திக் கொள்ளவேண்டும். அவர்களுடைய தந்தை, தாய், குழந்தை, அல்லது வேறு யாருடனாவது அவர்கள் ஏதோவொரு விதத்தில் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும். அன்பென்பது உங்களுக்குள் நிகழும்போது மிக அழகானது. முக்கியமானது பிறர் உங்களை நேசிப்பதல்ல, நீங்கள் அன்பாக இருப்பது. யாரோ ஒருவர் அன்பான நிலையில் நடந்தால்கூட, அது அற்புதமானது.

அன்பும் வெறுப்பும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள், அது வேறெப்படியும் இருக்கமுடியாது. அதன் ஒருபக்கம் விழுந்தால் நேசம் பிறக்கும். இன்னொரு பக்கம் விழுந்தால் வெறுப்பு கொப்பளிக்கும். நீங்கள் அன்பாய் மாறினால் அது உங்களுக்கு அற்புதமாக இருக்கிறது. அது உங்களைச் சுற்றியுள்ள அனைவருக்கும் அற்புதமாக இருக்கிறது, நீங்கள் அன்பாக மாறினால், நீங்கள் என்ன செய்தாலும், உங்களுடன் இருப்பவர்கள் அதை சரியாக எடுத்துக்கொள்வார்கள். நல்ல விஷயங்களாக கருதப்படுபவை கூட உங்களுக்குக் கெட்டதாக மாறிவிடும். அன்பென்பது நீங்கள் செய்யும் செயலல்ல. அன்பு என்பது நீங்கள் இருக்கும் நிலை. அன்பு என்றால் உணர்வின் இனிமை உங்களுக்குள் வந்துவிட்டது என்று அர்த்தம். ஒரு பாத்திரத்தை நீங்கள் எடுத்தாலும் அதை அன்பாகச் செய்வீர்கள். நீங்கள் இன்னொருவரைத் தொட்டாலும் அன்பாகத் தொடுவீர்கள். உங்களைச் சுற்றி எவரும் இல்லாவிட்டாலும் இங்கு அன்பாக அமர்வீர்கள். அன்பென்பது இன்னொருவரைப் பற்றியதல்ல, அது உங்களைப் பற்றியது. உங்களுக்குள் உள்ள உணர்வின் இனிமையால், உங்கள் வாழ்க்கை அழகாகிறது. என்ன நடந்தாலும் சரி, வெற்றி வந்தாலும் தோல்வி வந்தாலும், உங்கள் வாழ்க்கை இனிப்பாக இருக்கும்.



# மூச்சுப் பயிற்சி செய்யும் முறை மற்றும் அதன் நன்மைகள்

**சூரிய நமஸ்காரம்:**

சூரிய நமஸ்காரம் மொத்தம் 12 ஆசனங்களைக் கொண்டது. வேலை காரணமாக காலையில் யோகா செய்ய நேரம் இல்லாதவர்கள் இந்த ஒரு ஆசனத்தையாவது தினமும் செய்யுங்கள். இந்த சூர்ய நமஸ்காரத்தைச் செய்வதால் நுரையீரலின் செயல்பாடுகள் மேம்படுகிறது. டயபெட்டீஸ் வருதற்கான காரணிகளைக் கட்டுப் படுத்துகிறது. தசைகளை வலுபெறச் செய்கிறது. ஹைபர் டென்ஷன் ஆகாமல் இருக்க உதவுகிறது. பெப்டிக் அல்சர் வருவதைத் தடுக்கிறது. சியாடிகா எனும் கீழ் முதுகு வலி, மூட்டு வலி ஆகியவற்றை தடுக்கிறது. மாதவிடாய் இருப்பவர்கள் மற்றும் கர்ப்பிணிகள் இதனைச் செய்ய வேண்டாம்.

**மூச்சுப் பயிற்சி:**

இந்த மூச்சுப் பயிற்சியை உங்கள் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்கலாம். தினமும் 10 நிமிடங்களாவது மூச்சுப் பயிற்சி செய்வதன் மூலம் மனது ஒருநிலை அடையும். தேவை இல்லாத தவறான எண்ணங்கள் தோன்றுவதைக் குறைக்கும். மூளை சுறுசுறுப்படை வதோடு, நீங்கள் செய்யும் வேலையில் உற்பத்தித் திறனை யும் மேம்படுத்துகிறது. மேலும் கோவம், பயம், பதட்டம் அனைத்தையும் குறைத்து மனதை அமைதிப்படுத்த நிச்சயம் இந்த மூச்சுப்பயிற்சி உதவும். மாடிப்படிகட்டுகளில் ஏறினால் மூச்சு வாங்குகிறதா? இதனை செய்தால் மூச்சு வாங்குவது கண்டிப்பாகக் குறையும். நாம் உடல் நலத்துடன் வாழ வேண்டும் என்றால் நாம் விடும் மூச்சும் சிறப்பானதாக இருக்க வேண்டும்.

**மூச்சு பயிற்சி நன்மைகள்**

- நுரையீரலை பலப்படுத்தி, நுரையீரலின் செயல்பாடுகளை செம்மையாக்குகிறது.
- மூச்சு கோளாறுகளை போக்க உதவுகிறது.
- இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது.
- இருதய நலனை பாதுகாக்கிறது. இரத்த அழுத்தத்தை சீராக வைக்க உதவுகிறது.
- சீரண கோளாறுகளை போக்க உதவுகிறது.
- நரம்பு மண்டலத்தை பலப்படுத்துகிறது.
- நோய் எதிர்ப்பு திறனை அதிகப்படுத்துகிறது.
- மூளையின் செயல்பாடுகளை மேம்படுத்துகிறது.
- சரும நலத்தை பாதுகாக்கிறது.
- ஆழ்ந்த உறக்கத்தை தருகிறது.
- உடலில் இருக்கக் கூடிய நச்சுகளை வெளியேற்ற உதவுகிறது.
- கவனமின்மையை போக்க உதவுகிறது. மனதை ஒருநிலைப்படுத்துகிறது.
- மன அழுத்ததம், கோபம் குறைக்கிறது.
- மன அமைதியை வளர்க்கிறது

**செய்யும் முறை:**

- ஏதாவது ஒரு உட்கார்ந்திருக்கும் நிலையில் அல்லது பத்மாசனத்தில் அமர்ந்து பயிற்சியை செய்யலாம்.
- எந்த பயிற்சிகளையும் செய்யும் போது வடக்கு அல்லது கிழக்கு நோக்கி அமர்வது நல்லது. தலை, கழுத்து, முதுகு ஆகியவற்றை நேராக வைக்க வேண்டும்.
- மூச்சை வேகமாக வெளியே விடவும். அடிவயிற்றின் அடிபாகம் லேசாக அசையட்டும்.
- மூக்கு நுனியின் மீது எண்ணத்தைச் செலுத்துங்கள். சிறிது சிறிதாக மூச்சு இழுத்தும், அவைகளைத் தொடர்ந்து சிறிது சிறிது மூச்சு வெளி விடுவதும் செய்ய வேண்டும்.
- ஆரம்பத்தில் ஒரு நொடிக்கு ஒரு முறை மூச்சு இழுப்பதும் வெளி விடுதலும் வேண்டும். இவ்வாறு காலையிலும் மாலையிலும் மூன்று சுற்றுகள் செய்யலாம்.

இப்பயிற்சி மண்டையோடு, சுவாச அமைப்பு, நாசித் துவாரம் ஆகியவைகளை சுத்தமாக்குகிறது. சைனஸ் நோய்களைக் குணமாக்குகிறது. சுவாச குழாய்களிலுள்ள சளியைப் போக்குகிறது. இதனால் ஆஸ்துமா குணமாகிறது. மேலும் மலச்சிக்கல் பிரச்சனைக்கு சிறந்த மூச்சு பயிற்சி ஆகும்.

நாடி சுத்தி பயிற்சியனை காலை, மதியம், மாலை சாப்பிடும் முன் பயிற்சி செய்ய வேண்டும். தரையில் ஒரு விரிப்பு விரித்து அதில் அமர்ந்து முதுகெலும்பு நேராக வைத்து செய்ய வேண்டும். வயதானவர்கள் நாற்காலியில் அமர்ந்து செய்யலாம். இடது கை சின்முத்திரையில் இருக்க வேண்டும். (பெருவிரல், ஆள்காட்டி விரல் நுனியை இணைத்து மற்ற விரல்கள் தரையை நோக்கியிருக்கவும்) வலது கை பெருவிரலால் வலது மூக்கை அடைத்து இடது மூக்கில் மிக மெதுவாக மூச்சை உள் இழுத்து, மிக மெதுவாக இடது மூக்கிலேயே மூச்சை வெளிவிடவும். மீண்டும் இடது மூக்கிலேயே மூச்சை இழுத்து மிக மெதுவாக இடது மூக்கிலேயே வெளியிடவும். இதுபோல் பத்து முறைகள் செய்யவும். (மூச்சு இழுக்கும் பொழுது வயிறு வெளியில் வர வேண்டும். மூச்சு விடும் பொழுது வயிறு உள்ளே மெதுவாக செல்ல வேண்டும்).

இப்பொழுது வலது கை மோதிர விரலால் இடது மூக்கை அடைத்து வலது மூக்கிலேயே மெதுவாக மூச்சை இழுத்து வலது மூக்கிலேயே மிக மெதுவாக மூச்சை வெளிவிடவும். இதுபோல் பத்து முறைகள் செய்யவும். ★★★★★★



# வெற்றியின் தோல்வி

அருட்பணி. ஜெயசீலன் சவேரியார் பிச்சை ச.ச.

டாடா என்ற தமிழ் சினிமாவின் ஒரு காட்சி எனது சிந்தனையை சுரண்டியது. சிறு பிள்ளையோடு தனித்து விடப்பட்ட கதாநாயகன், குழந்தையை வளர்த்தெடுக்க முட்டிமோதும் நெகிழ்ச்சி நிகழ்வுகள், கிடைத்த வேலைகளை செய்தாலும் உணவு, உறைவிடம், குழந்தையின் படிப்பு என்ற செலவு சுமைகள், கிட்டத்து உறவுகள் அனைத்தும் தூரத்து சொந்தங்களான பரிதாப நிலை. சமூக அவலங்களோடு, பொருளாதார பாரம் அவன் தோள்களை பதம் பார்த்தன. ஒருசில நண்பர்களின் துணையோடும், பல எதிர்காலக் கனவுகளோடும் அவனது வாழ்க்கைப் பயணம் மெல்ல மெல்ல உருண்டோடியது. ஒருநாள் சிறுவயது தோழியைச் சந்திக்க நேரிடுகிறது. இவன் நிலை அறிந்த அவள், தான் வேலை செய்யும் இடத்தில் பணியிடம் ஒன்று காலியாக இருப்பதாகவும், அதை அவனுக்கு பரிந்துரைப்பதாகவும் சொல்லி, நடைமுறைப்படுத்துகிறாள். ஆச்சரியமாக இருந்தாலும், மகிழ்ச்சியின் உச்சத்திற்கே சென்று விடுகிறான் கதாநாயகன். அடுத்தநாள், சிறிது பதட்டத்தோடு அந்த நிறுவனத்தில் நியமன உத்தரவோடு காத்திருக்கின்றான். ஆனால் அங்கு நடந்த உரையாடல் அவன் தலையில் இடியாய் இறங்கியது: அந்த வேலையை ஏற்கனவே வேறொருவருக்கு கொடுத்து விட்டதாகவும், அதை அந்த தோழியே அவருக்காக பரிந்து பேசியதாகவும், தோழியைவிட கதாநாயகனுக்கு அதிகமாக சம்பளம் வருவதை அவள் விரும்பாததால் இவ்வாறு செய்ததாகவும் கேள்விப்பட்டான். மனம் சுக்குநூறாக உடைந்தவன், தோழியை நேரில் சந்தித்து சொன்ன வார்த்தைகள் பசுமரத்தாணி போல் என் உள்ளத்தில் பதிந்தது:

**உங்களால நாங்க நல்லா இருக்கணும், ஆனால் உங்களவிட, நாங்க நல்லா இருந்து விடக் கூடாது.**

எனக்குமேல் எவரும் வளரக்கூடாது என்ற எண்ணம் இன்று நம் அனைவரையும் ஆட்சி செய்கிறது என்பது வருத்தமே! நாம் வாழும் சமுதாயத்தில், ஒருவனின் வளர்ச்சி மற்றொருவனின் வீழ்ச்சியாக பார்க்கப்படுகின்றது. நான் வளர வேண்டுமென்றால், நீ குறுக வேண்டும், நான் உயர வேண்டுமென்றால், நீ குறைய வேண்டும், நான் வெற்றி பெற வேண்டுமென்றால், நீ தோல்வி அடைய வேண்டும் என்னும் சித்தாந்தத்தால் நாம் கட்டப்படுகிறோம். ஓட்டப் பந்தயத்தில் முதல் பரிசை ஒருவர்தான் பெறமுடியும் என்னும் கோட்பாட்டை நமக்கு நாமே வடிவமைத்துக் கொள்கிறோம். கவலை என்னவென்றால், நம்மில் பலர் நான் வளராவிட்டாலும் பரவாயில்லை, அவன் வளரக்கூடாது என்னும் மமதை சிந்தனைகள் நம்மை ஆட்டிப் படைப்பதுதான் நான் வெற்றி எனக்கு கிடைக்கவில்லை என்றாலும் பரவாயில்லை. அவனுக்கு கிடைக்கக் கூடாது என்ற தன்னல செருக்குகளால் நாம் கட்டமைக்கப்படுவதுதான். நம்மை அறியாமலேயே, நமது சிந்தனைகள், செயல்கள் இப்படிப்பட்ட குறுகிய மனநிலைக்கு தள்ளப்படுகிறது என்பதுதான் இன்றைய எதார்த்தம்.

சமீபத்தில் திரைப்படம் ஒன்று பார்த்துவிட்டு நானும் எனது நண்பனும் திரை அரங்கத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தோம். அப்போது அந்த படத்தைப் பற்றி பல்வேறு கோணங்களில் விமர்சித்து கொண்டிருந்தோம். அருமையான படமாக இருந்தாலும் ஒரு சமூகத்தைப் பற்றி இழிவாக பேசியதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதைப்பற்றி கலந்தாய்வு செய்து கொண்டிருக்கும்போது, அதே படத்தைப் பார்த்த இரு இளையோர் எங்கள் அருகில் பேசிக்கொண்டே சென்றனர். இருவருமே படத்தின் கருவை விட்டு விட்டு, இழிவாக காட்சிப்படுத்தப்பட்ட சமூகத்தைப் பற்றி தரக்குறைவாக பேசியதோடு மட்டுமல்லாமல், இவர்களை நமக்கு மேல் வளர விடக்கூடாது, என்ற வன்மம் நிறைந்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டே சென்றனர். நம்மைச் சுற்றியுள்ள அனைத்து தளங்களுமே இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வு கருத்துக்களையே நாம் உள்வாங்க நம்மை பழக்கப்படுத்துகிறது. குடும்பம், அரசியல், பணித்தளங்கள், சில வேளைகளில் ஆன்மிகத் தளங்களில் கூட அடுத்தவனை மட்டம் தட்டி, தன்னை உயர்த்திக்கொள்ளவும் நானா? அவனா? என்ற போட்டி பொறாமைகளால் நம்மைச் செதுக்கவும் துணைபோகிறது என்பதை நினைக்கும்போது பயம் கலந்த கலக்கம் என்னை ஆட்கொள்கிறது.

ஒருவனை கீழே தள்ளிவிட்டு நாம் முன்னுக்கு வருவது அறம் அற்ற செயல் அல்லவா! உண்மையான வெற்றி என்பது அனைவரும் இணைந்து பெறுவதுதானே! மற்றவரின் தோல்வியில் மகிழ்ச்சி கொள்வது, உண்மையான வெற்றி ஆகாது. அப்படிப்பட்ட மனநிலையை நான் தோல்வி என்றே சொல்லுவேன். ஒருவன் பிறரைப் பகைத்து, அவர்களை மிதித்து, அவர்களைப் பின்னுக்கு தள்ளிய பிறகு வாழ்வில் வெற்றி பெறுகிறான் என்றால், அது முழுமையான வெற்றி கிடையாது. அதைத் தோல்வி என்றே நான் கருதுவேன் அதை நான் வெற்றியின் தோல்வி என்பேன். அனைவரும் இணைந்து பெறுவதுதான் முழுமையான வெற்றி. பிறரின் வளர்ச்சியில் மகிழ்ச்சி காண்பவன்தான் உண்மையான வெற்றியாளன். அனைவரையும் வெற்றிப்பாதைக்கு அழைப்பவனே சரியான வழிகாட்டி. நமது பயணம் தனிமனித வெற்றிக்காக அல்லாமல், அனைவரின் வளர்ச்சிக்கான பயணமாக அமையட்டும்! வெற்றியை விட சோர்ந்து பயணிக்கும் பயணத்தை ரசிப்போம்!! இணைந்து வெற்றிக்காக பயணிப்போம்!!! நமது இணைப் பயணம் வெற்றியின் பயணமாக தொடரட்டும்!!!! ♦♦♦♦♦♦♦♦♦♦

## அசாத்திய ஆற்றலோடு விளங்கிய 10 புனிதர்களில்
## 10வது புனித குட்டேரியா




அசாத்திய ஆற்றல் பெற்ற புனிதர்களில் 10 வது இடம் பிடிப்பவர் விடுவிக்கும் ஆற்றல் கொண்ட புனித குட்டேரியா. Power of Liberation) இவரின் சகோதரிகளான ஐமேலியர், லிபெறதர், ஜெமர், ஜெனீப்ரர், ஜெர்மானர், பசிலிசர், மரிக்கர், மற்றும் விடோரியா, குவித்தேரியா என்பர். இவர்கள் அனைவரும் ரோமில் இராணுவ அதிகாரியாக இருந்த ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் பிறந்த ஒன்பது குழந்தைகளாவர். அதில் இவரும் ஒருவர்.

ஆண் குழந்தைகளை ஏற்றுக்கொள்ளும் சமுதாயத்தில் தன் உறவினர்கள் தன்னை நிராகரிப்பார்கள் என்று கருதிய தாய், ஒரே நேரத்தில் ஒன்பது குழந்தைகள் பெற்றதால் தன்னை விலங்கு என்று கருதுவார்கள் என்று கருதி, அவர் தனது குழந்தைகளை நீரில் மூழ்கி கொல்வதற்கு தன் பணியாளர் ஒருவரை ஏற்பாடு செய்தார். அக்குழந்தைகள் மீது இரக்கம் கொண்ட அப் பணியாளர் அவர்களைக் கொல்லாமல் பத்திரமாக குழந்தைகளை சில உள்ளூர் பெண்களுக்கு தத்து கொடுத்து பாதுகாத்து வந்தார்.

இவ்வாறு வளர்ந்து வந்த புனித குட்டேரியாவும், சகோதரிகளும் ஒருமுறை ரோமானிய கடவுளர்களை வழிபாட மறுத்தனர். ஆகவே அவ்விடத்திற்கு அதிகாரியாக இருந்த தங்களின் தந்தையின், முன் கொண்டு வரப்பட்டனர். அவர்களைக் கண்ட உடனேயே அவர்களை தனது மகள்கள் என அவர் உணர்ந்தார். அவர்களின் தந்தை அவர்களை ரோம அதிகாரிகளுக்கு திருமணம் செய்து வைக்க விரும்பினார். அவர்கள் அதற்கு இணங்க மறுத்ததால் அவர்களை ஒரு கோபுரத்தில் சிறை வைத்தார். எனினும், அவர்கள் கிறிஸ்துவை அறிந்து கொண்டவராய் உரோமைப் பேரரசுக்கு எதிராக கரந்தடிப் போரில் ஈடுபட்டு, சிறைச்சாலை எங்கும் சென்று நற்செய்தியை அறிவித்து சிறைப்பட்டோரை சிறையில் இருந்து வெளியே கொண்டு வந்தார்.

இதனால் வெறுப்பு கொண்ட அரசன் அவரின் தலையை வெட்டும்படி உத்தரவு பிறப்பித்தான். இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். குவித்தேரியா தலை வெட்டி கொல்லப்பட்டார். தலை வெட்டப்பட்டு குளத்தில் தலை வேறு உடல் வேறாக தூக்கி எறியப்பட்டார். இருப்பினும் தனது தலையை கையில் ஏந்தியபடியே குளத்தில் இருந்து வெளியே வந்து நற்செய்தி அறிவிக்கத் தொடங்கினார். இதே போன்றதொரு நிகழ்வு பிரான்ஸ் நாட்டின் பாதுகாவலர் புனித டெனிஸ் வாழ்விலும் நடந்தது. தலை வெட்டப்பட்ட நிலையில் பல மயில் தூரம் தனது தலையை கரங்களில் ஏந்திக்கொண்டு நடந்து சென்று நற்செய்தியை அறிவித்தார் என சொல்லப்படுகிறது.



## நிம்மதியான வாழ்க்கை வேண்டுமா?

மனிதன் வாழ்வில் என்னதான் பணம் சம்பாதித்தாலும் மனதில் நிம்மதி என்பது நிச்சயம் வேண்டும். அப்பொழுது தான் அவன் மகிழ்ச்சியான வாழ்வை வாழ முடியும். மேலும், உங்களை சுற்றி எந்த ஒரு பிரச்சனையும் இல்லை என்றாலும், மனதில் பொறாமை போட்டிகள் இருந்தாலும் கட்டாயம் நிம்மதியான வாழ்வு வாழ முடியாது.

இன்னும் சொல்ல போனால் மனிதனின் மொத்த சந்தோஷத்தையும் கெடுப்பதும் அவனுடைய இந்த தீய எண்ணங்கள் தான். ஒரு மனிதனுக்கு தீய எண்ணங்கள் அவனுடைய சூழ்நிலையால் ஏற்படும். ஆக, அவனுடைய நிம்மதி இல்லாத சூழ்நிலைக்கு அவனுடைய தேவை இல்லாத சிந்தனைகள் என்று தெரிந்தாலும் அவனால் அதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிவதில்லை. அந்த வேளையில் எவர் ஒருவர் அவருடைய தவறை உணர்ந்து உண்மையில் தீய எண்ணங்களில் இருந்து விடுபட வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் செய்யவேண்டிய ஒரே விஷயம் இறைவழிபாடு தான். மனதார நம்மை இறைவனிடம் சரண் அடைய நம்முள் இருக்கும் அழுக்குகள் எல்லாம் படிப்படியாக குறையும்.

அதோடு மனதை ஒருமனப்படுத்தி இறைவனை நினைத்து வழிபாடு செய்தால், இன்னும் கூடுதல் பலன்கள் பெற முடியும். அதிலும் " தந்தையே போற்றி இயேசுவே போற்றி ஆவியே போற்றி– இப்படியான வார்த்தைகளை இறைவனை நினைத்து சொல்லும்போது நம் மனதிற்குள் இனம் புரியாத ஒரு சந்தோஷம் ஏற்படும். இதை சொல்லும் பொழுது நம் மனதில் உற்சாகம் பெருகும்.

அத்துடன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் வாழ்க்கையில் வரும் சுக துக்கங்களை ஏற்றுக் கொண்டு, இந்த அழகான வாழ்க்கையை ரசித்து வாழ்ந்து பாருங்கள். புன்னகையோடு சேர்த்து, தினமும் நீங்கள் சொல்லக் கூடிய இந்த மந்திர வார்த்தை உங்கள் வாழ்க்கையை இன்னும் அழகாக மாற்றி தரும். எப்போதெல்லாம் இறைவனின் மீது உங்கள் சிந்தனை செல்கிறதோ, அப்போதெல்லாம் மனதிற்கு மன அமைதி கிடைக்கும் வாய்ப்பு உங்களுக்கு வரும்.

நீங்கள் எவ்வளவு பெரிய இன்னல்களில் இருந்தாலும் சரி இறைபக்தியால் நம்முடைய மனநிலை மாறும். நம்முடைய வாழ்வில் இனம் புரியாத நேர்மறை எண்ணங்களும் சிந்தனைகளும் பெருகும். உங்கள் மனம் எப்பொழுது எல்லாம் கவலை கொள்கிறதோ, அப்பொழுது எல்லாம் மனதில் இறைவனை நினைத்துக் கொண்டால் உங்கள் வாழ்வு வளம் பெருகும்.

# திரு அவைச் செய்திகள்

## இறையழைத்தலுக்காக இறைவேண்டல் செய்வோம் - திருத்தந்தை



வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவிலில் குருத்துவ அருள்பொழிவு திருச்சடங்கு

இளைஞர்கள் தங்கள் இறையழைத்தலை செபம், அமைதி மற்றும் நற்சிந்தனைகள் வழியாகத் தெளிந்து தேர்ந்து, கடவுள் தங்களை வழி நடத்துகிறார் என்பதை நம்ப வேண்டும்" எனவும் இறையழைத்தலுக்காக இறைவேண்டல் செய்யவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்,. அழைப்பு விடுத்துள்ளார். தாங்கள் பெற்றுள்ள இறையழைத்தலை கடவுளிடமிருந்து கிடைத்த விலைமதிப்பற்ற ஒரு கொடையாகவும், நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் நிறைவிற்கு வழிவகுக்கும் ஒன்றாகவும் கருதுமாறு இளையோருக்கு அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை. இறுதியாக,. இளைஞர்களின் முயற்சிகளை திருஅவையின் அன்னையாம் புனித கன்னி மரியாவின் பரிந்துரையின் வழியாக ஒப்படைத்து, தனது ஆசிரையும் வழங்கி உலக இறையழைத்தல் நாளுக்கான செய்தியை நிறைவுசெய்துள்ளார் திருத்தந்தை.

## திரு அவையின் தலைமைப் பதவியில் 12 ஆண்டுகள்




திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருஅவையை வழி நடத்த தேர்ந்தெடுக்கப்பட்டதன் 12ஆம் ஆண்டு நிறைவு மார்ச் 13, வியாழக்கிழமையன்று சிறப்பிக்கப்பட்டதை யொட்டி, ஜெமெல்லி மருத்துவர்களுடன் இணைந்து அதனைக் கொண்டாடியுள்ளார் திருத்தந்தை.

வியாழக்கிழமை மாலை ஒரு கேக்குடனும் மெழுகு – திரிகளுடனும் திருத்தந்தையின் அறைக்குள் சென்ற, அவரைக் கவனித்துக் கொள்ளும் மருத்துவக்குழு, திருத்தந்தையோடு இணைந்து கேக் வெட்டி அந்நாளை சிறப்பித்துள்ளது.

## இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா செய்தி

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு, நம்பிக்கை நிறைந்த புதிய உலகை உருவாக்கும் ஒரு வரலாற்று நிகழ்வு. இது வெறும் கற்பனைக் காட்சி அல்ல." – திருத்தந்தை பிரான்சிஸ். உயிர்த்த ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவில் பிரியமானவர்களே! உங்கள் அனைவருக்கும் உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்!

ஒருநாள் அந்தத் தாய் என்னிடம் பகிர்ந்தது, பாதர், இந்த மகன் என் வயிற்றில் இருக்கும்போதே என் கணவரை இழந்தேன். பிறக்கும்போது என் மகன் இந்த நிலையில்தான் பிறந்தான். பலரும் என்னை ஏளனம் செய்து புறக்கணித்தார்கள், இழிவுபடுத்தி ஒதுக்கிவைத்தார்கள். ஆனால் என் இயேசுவும், மாதாவும் எங்களைக் கைவிடவில்லை. எங்களை ஏற்று அன்பு செய்கிறார்கள். அந்த அன்பின் நம்பிக்கையில் நானும் என் மகனும் உயிர் வாழ்கின்றோம். இப்போது உணர்கின்றேன், «உயிர்த்த இயேசு இன்றும் இப்படிப்பட்ட நம்பிக்கையாளர்களின் ஆளுமைகளில், உண்மையான இறைநம்பிக்கையாளர்களில், உயிர் வாழ்கிறார்» .



ஆம், பிரியமானவர்களே, நோய், சாவு, என்பது ஒரு மாபெரும் இழிவு, பெருத்த அவமானம், பெரிய சாபம் என்று நாம் எண்ணினாலும், நம் ஆண்டவர் இயேசு சாபமான சிலுவையை தன் உயிர்ப்பினால் ஒரு பெரிய நம்பிக்கையின் ஆசீர்வாதமாக மாற்றினார். இதனையே புனித பேதுரு யூதத் தலைமைச் சங்கத்தின் முன் இவ்வாறு சொல்கிறார், " நீங்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தீர்கள். ஆனால், கடவுள் இறந்த அவரை உயிருடன் எழுப்பினார் (திபணி 4:10).

இயேசுவின் உயிர்ப்பு ஒரு வரலாற்று நிகழ்வு என்பதை புனித பவுல் " கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" என்று 1 கொரி 15:14ம் வசனத்தில் சான்று பகர்கின்றார். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா ஒரு புதிய பாஸ்கா பெருவிழா, வெற்றித் திருவிழா, நம்பிக்கை விழா, ஒளியின் விழா.

இறைவன் இருளில் வாழ்பவர் அல்ல. அவர் ஒளியானவர். வெளிச்சத்தில் வாழ்பவர். இருள் என்பது எதிர்மறை. வெளிச்சம் என்பது நேர்நிலை. எனவேதான் கடவுளின் முதல் வார்த்தை ... முதல் படைப்பு " ஒளி உண்டாகட்டும்" (தொநூ 1:3) என்பதாகும். "

தொடர்ச்சி 23ம் பக்கம்

# தாயகச் செய்திகள்



யாழ் மாகாண அமலமரித்தியாகிகள் சபையினரின் உயர் மாநாடு 2025ம் ஆண்டு மாசி மாதம் 16ஆம் திகதி தொடங்கி 19ம் திகதி வரை மன்னாரில் அமைந்துள்ள அமலமரித்தியாகிகளின் ஞானோதயம் இல்லத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது. யாழ் மாகாண அமலமரித்தியாகிகள் சபை முதல்வர் அருட்தந்தை ஜெயந்தன் பச்சேக் அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்படும் இம்மாநாட்டின் முதல் நாள் நிகழ்வுகள் மிகவும் சிறப்பானமுறையில் அங்கு நடைபெற்றன.

வரவேற்பு நடனத்தோடு விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, திருத்தந்தை, அமலமரித் தியாகிகள் மற்றும் யாழ் மாகாண அமலமரித்தியாகிகள் கொடிகள் ஏற்றப்பட்டு மாநாட்டு கீதம் இசைக்கப்பட்டு ஆரம்பமான இந்நிகழ்வில், நற்கருணை ஆராதனை, மாநாட்டின் அறிமுகம் ஆகியவை இடம்பெற்றன.

இந்நிகழ்வில், மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்ணான்டோ, யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், அநுராதபுர மறைமாவட்ட ஆயர் அமலமரித்தியாகிகள் சபை பேரருட்தந்தை நோபேட் அன்றாடி, யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை கிறிஸ்துநாயகம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இயேசு சபையைச் சேர்ந்த அருட்தந்தை ஜெயராஜ் இராசையா அவர்களின் வழிநடத்தலில் அமலமரித்தியாகிகளின் வாழ்வையும் பல்வேறுபட்ட பணிகளையும் சிந்தித்து எதிர்காலப் பணிகளை திட்டமிடும் செயலமர்வாக முன்னெடுக்கப்பட்டது.

ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை முன்னெடுக்கப்படும் இவ் உயர் மாநாடு இவ்வருடம் 2025ஆம் யூபிலி ஆண்டில் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்படுவதுடன் இந்நிகழ்வில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் 85க்கும் அதிகமான யாழ் மாகாண அமலமரித்தியாகிகள் பங்குபற்றியுள்ளனர்.

இம்மாநாடு யாழ் மாகாண அமலமரித் தியாகிகளுடைய வாழ்விலும் பணியிலும் புதிய உத்வேகத்தையும் ஊக்கத்தையும் புதிய சிந்தனைகளையும் புதிய பார்வையையும் ஏற்படுத்த வழிகோலுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

## ஐந்தாம் ஆண்டு நினைவேந்தல்




**நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே! முடிவில்லாத ஒளி அவர்கள்மேல் ஒளிர்வதாக !**

ஆண்டுகள் ஐந்தாகியும் ஆறவில்லை எங்கள் சோகம். தாண்டிப்பல ஆண்டு போனாலும் மாறாது உங்கள் பாசம். கூண்டுப் பறவையாக இபபடி நாம் வாழ்வதைக் கண்ட காலன் தூண்டில் போட்டு கவர்ந்தானோ? எங்கள் தெய்வமே! உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்கின்றோம்.

**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதுரர்கள், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

# படித்ததில் பிடித்தது



நான் ஒரு பாரம்பரிய குடும்பத்தை சேர்ந்த பெண்! என்னுடைய நாடு பாகிஸ்தான்! என் அப்பாவை எனக்கு அதிகம் பிடிக்கும்! எனக்கு பதினெட்டு வயதாகும்போது எனக்கு திருமணம் செய்யவேண்டும் என்று அப்பா விரும்பினார்! ஆனால் எனக்கு திருமணத்தில் விருப்பமில்லை! அதை அப்பாவிடம் காட்டிக்கொள்ளவும் இல்லை!

எனக்கு திருமணம் செய்து வைத்தால் உங்களுக்கு சந்தோஷமா அப்பா என்றேன்! ஆமாம் என்று புன்முறுவலோடு தலையாட்டினார்! அவர் சந்தோஷத்திற்காக அவர் பார்த்த மாப்பிள்ளையை திருமணம் செய்துகொண்டேன்! திருமணத்திற்கு பிறகும் எனக்கு பெரிய சந்தோஷம் இல்லை. ஆனாலும் வாழ்ந்துகொண்டு இருந்தேன்!

ஒரு நாள் நானும், கணவரும் காரில் சென்று கொண்டு இருந்தோம்! அவர் தூக்கக் கலக்கத்தில் காரை தவறாக ஓட்டி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகும் நேரத்தில், அவர் மட்டும் கதவை திறந்து குதித்துவிட நான் காருக்குள்ளேயே சிக்கிக்கொண்டேன்! காப்பாற்றவே முடியாத சூழ்நிலையில் இருந்து உயிரை மட்டும் காப்பாற்றினார்கள்!

முதல் நாள் வந்து, உங்கள் இரண்டு கைகளும் உடைந்து விட்டது, இனிமேல் உங்களுக்கு பிடித்த ஓவியம் வரையும் பணியை செய்யமுடியாது என்றார்கள்! அடுத்த முறை வந்து உங்கள் இரண்டு கால்களும் உடைந்துவிட்டது, உங்களால் இனிமேல் நடக்கமுடியாது, Wheel chair தான் பயன்படுத்த வேண்டும் என்றார்கள்! மீண்டும் ஒரு முறை வந்து,உங்களுடைய முதுகெலும்பும் இடுப்பு எலும்புகளும் உடைந்து விட்டதால் உங்களால் இனி எப்போதுமே ஒரு குழந்தைக்கு தாயாக முடியாது என்றாார்கள்!

இனி வாழ்நாள் முழுவதும் Wheel chair ல் உட்கார்ந்து எல்லாவற்றுக்கும் யாரோ ஒருவரின் உதவியை எதிர்பார்த்து வாழ்கின்ற இந்த வாழ்க்கை எதற்கு, உயிரை மட்டும் மிச்சம் வைத்ததற்கு பதிலாக, அந்த இறைவன் என்னை கொன்றிருக்கலாமே என்று தோன்றியது! அவர் கொல்லாவிட்டால் என்ன, நாமே தற்கொலை செய்து கொள்ளலாம் என்று தோன்றினாலும் அதைச்செய்யக் கூட கை கால் வேண்டுமே என்று படுக்கையிலேயே அழுது கொண்டிருந்தேன்! இந்த அதிர்ச்சியை எல்லாம் கடந்த இன்னொரு அதிரச்சி, நான் எதற்கும் உபயோகப்பட மாட்டேன் என்று என் கணவர் எனக்கு விவாகரத்து நோட்டிஸ் அனுப்பி இருந்தார்! விவாகரத்துக்கு ஒப்புக்கொள்ள முடியாமல், எதற்காக யாருக்காக நான் வாழ வேண்டும் என்று எத்தனை முறை யோசித்து அழுதாலும் எனக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை! ஆனால் எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒருநாள் தெளிவு கிடைத்தது! என்னிடம் இருந்து இத்தனையும் பறித்துக்கொண்ட இறைவன், ஏன் என் உயிரை மட்டும் இன்னும் வைத்திருப்பதின் மூலம் நான் செய்ய வேண்டிய ஏதோ ஒரு வேலை, செல்லவேண்டிய ஏதோ ஒரு பயணம் மிச்சமிருக்கிறது என்றே தோன்றியது! எல்லாவற்றையும் இறைவனிடம் விட்டுவிட்டு, எதையும் எதிர் கொள்ளும் தைரியத்தை மட்டும் எனக்கு கொடு என்று வேண்டிக்கொண்டு தைரியமாக ஒரு முடிவு எடுத்தேன்! அந்த முதல் முடிவு, என் கணவருக்கு விவாகரத்து அளிப்பது! சந்தோஷப்பட்டார்! இன்னொரு பெண்ணை திருமணமும் செய்து கொண்டார்! மனப்பூர்வமாக வாழ்த்துமடல் அனுப்பினேன்!

ஹாஸ்பிடலை விட்டு நகர முடியாமல் இன்னும் ஹாஸ்பிடலிலேயே இருந்தேன்! படுத்த நிலையில் நான்கு பக்கமும் சுவர்கள், எந்த பக்கம் திரும்பினாலும் அதே வெள்ளை நிற சுவர்கள்! குறைந்தபட்சம் இந்த சுவர்களின் நிறத்தையாவது மாற்றுங்கள், மாதக்கணக்கில் இதை பார்த்து பார்த்து பைத்தியம் பிடிக்கிறது என்று கத்தினேன்! மாற்றினார்கள்!

உடைந்த கையை வைத்து எதையாவது அரைகுறையாவது வரைய முடியாதா என்று முயன்றேன்! என் முயற்சிக்கு கொஞ்சம் கொஞ்சம் பலன் கிடைத்தது! வரைவது ஒன்றே எனக்கான ஜன்னலாக தெரிய தூங்கும் நேரத்தை தவிர மற்ற எல்லா நேரத்திலும் வரைந்துகொண்டே இருந்தேன்! நான் வரைந்த அந்த ஓவியங்களே என்னை உயிர்ப்போடு வைத்திருந்தது! கால்கள் இல்லாவிட்டால் என்ன வெளியே போக வீல் சேர் போதும் என்று தோன்றியது! குழந்தை பெற முடியாவிட்டால் என்ன ஏற்கனவே பிறந்து அனாதை யாக்கப்பட்ட எத்தனையோ குழந்தைகள் இருக்கிறார்கள் அவர்களில் ஒரு குழந்தையை தத்து எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவெடுத்தேன்!

உட்கார்ந்த இடத்தில் இருந்தே எழுதமுடியுமே என்று எழுதஆரம்பித்தேன்! குரல் நன்றாகத்தானே இருக்கிறது பாடலாமே என்று பாட ஆரம்பித்தேன்! வாயும் நன்றாகத் தானே இருக்கிறது என்று பேச ஆரம்பித்தேன்! என்னை இறைவன் உயிரோட வைத்திருந்ததின் காரணம் கொஞ்சம் கொஞ்சமாக புரிய ஆரம்பித்தது! எழுந்திரிக்கவே முடியாத பள்ளத்தில் இருந்து எப்படி எழுந்து வந்தேன் என்ற என்னுடைய கதை யையே எல்லோரிடமும் சொல்ல ஆரம்பித்தேன்! எப்படி முடிந்தது என்று எல்லோருமே ஆச்சர்யப்பட்டார்கள்! அது அவர்களுக்கும் ஒரு நம்பிக்கையை கொடுத்தது!

**மிகுதி 23ம் பக்கம்**

வீல் சேரில் நகர்ந்து மேடைகளிலும் பேச ஆரம்பித்தேன்! மீண்டும் மீண்டும் சலிக்காமல் என் கதையையே சொல்ல ஆரம்பித்தேன்! என் கதையை சொல்லி நான் பரிதாபத்தை தேடிக்கொள்வதாகவும் பலர் சொன்னார்கள், நான் கவலைப்படவில்லை

என் கதை பரிதாபத்திற்குரியதாக இருந்தாலும் அது பலரை உத்வேகப்படுத்தியது, அவர்களை எழுந்து நடக்கவைத்தது! தோற்றுப்போன அவர்கள் எழுந்து நடப்பதை பார்க்க சந்தோஷமாக இருந்தது! மீண்டும் மீண்டும், மீண்டும் மீண்டும் என என் கதைகளையே எல்லா மேடைகளிலும் பேசினேன், ஆயிரக்கணக்கான மக்கள் கூடினார்கள், என்னுடைய கதையே என்னை **Motivational** பேச்சாளராக மாற்றியது!

ஒரு தொலைக்காட்சியில் தொகுப்பாளராகவும் மாற்றியது! என்னுடைய பாகிஸ்தானை கடந்து உலகம் முழுவதும் என்னுடைய கதை எல்லோருக்கும் தெரிய ஆரம்பித்தது! எல்லோருக்கும் தன்னம்பிக்கையை உருவாக்கியது!

**BBC** ல் என்னை சிறப்பு பேட்டி எடுத்தார்கள்! ஐநாவில் என்னை பேச அழைத்தார்கள், அங்கேயும் என் கதையை பேசினேன்! நிறைய இசை ஆல்பங்களை பாடி சேர்ந்து வெளியிட்டேன், நிறைய எழுதினேன்! இவற்றை எல்லாம் எனக்கு கொடுக்கவேண்டும் என்று கடவுள் நினைத்திருந்தால், பிறகு எப்படி என்னை கார் விபத்தில் சாக விடுவார்! உனக்காக நிறைய வைத்திருக்கிறேன் மகளே, சீக்கிரம் எழுந்து வா என்று அவர் எனக்காக காத்திருந்ததாகத்தான் தோன்றுகிறது!

விபத்துக்கு பின் என்னுடைய உடம்போடும் வீல் சீரோடும் சேர்த்து Urinal bag ஒன்று எப்போதுமே பொருத்தப்பட்டிருக்கும்! எங்கு போனாலும் அது இல்லாமல் போகமுடியாது என்னுடையஉடல் பிரச்சனை அவ்வாறானது! சரி இருந்துவிட்டு போ என்று என் சீட்டிற்கு பின்னாலேயே வைத்துக்கொண்டேன்! அது என் இழப்பின் குறியீடு! என்னை அது பின்தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்,

ஆனால் ஒருபோதும் என்னை முந்த முடியாது! எனக்கான இறப்பு என்றோ ஒரு நாள் இருக்கும், இருந்துவிட்டு போகட்டும், அதற்கு முன் தன்னம்பிக்கையை இழந்து நானே ஏன் சாகவேண்டும்! தோற்றுப்போனதாய் நினைத்துவிட்டாலே நான் செத்து விட்டாதாய் அர்த்தம், நான் சாக விரும்பவில்லை, நீங்களும் சாகாதீர்கள்! தோற்றுப்போகும் போதெல்லாம் இந்த இரும்புப்பெண் முனீபா மசாரியை நினைத்துக் கொள்ளுங்கள், வெற்றியின் கதவு உங்களின் விழி கூர்மை கண்டு தானாய் திறக்கும்! ❋❋❋❋❋❋❋❋

**20ம் பக்கத் தொடர்ச்சி**



“ நானே உலகின் ஒளி. என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார். வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்” (யோவா 8:12). இந்த பாஸ்கா புனித நீர் கூட ஆண்டவர் இயேசுதான். “ யாரேனும் தாகமாயிருந்தால் என்னிடம் வரட்டும், என்னிடம் நம்பிக்கை கொள்வோர் பருகட்டும்” என்று இயேசு முழக்கமிடுகிறார் (யோ 7:37).

ஆம் இருளும், வெறுமையும், பசி தாகமும் நிறைந்த இந்த உலகில் உயிர்த்த இயேசுதான், நமக்கு வழிகாட்டும் ஒளியாக, உயிர் தரும் நீராக, வாழ்வு தரும் நற்கருணை உணவாக இருக்கின்றார்.

இந்த உயிர்ப்பின் பாஸ்கா காலத்தில் நம் ஒவ்வொருவருடைய இல்லத்தையும், வீட்டையும் சந்திக்கின்றார். “ நான் கதவு அருகில் நின்று தட்டிக் கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன். அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள். நான் வெற்றி பெற்று என் தந்தையின் அரியணையில் அவரோடு வீற்றிருப்பதுபோல வெற்றிபெறும் எவருக்குமே எனது அரியணையில் என்னோடு வீற்றிருக்கும் உரிமை அளிப்பேன்” என்று (திவெளி 3:19–20) வாக்குறுதி தருகின்றார்.

வாக்குமாறாத நம் ஆண்டவர் இயேசுவுக்கு நம் இதயக் கதவைத் திறப்போம். இறைநம்பிக்கையில் வளர்வோம்! நம் உயிர்த்த இயேசு நம் பயணத்தில் உடனிருந்து வழி நடத்துவார். உயிர்ப்பின் தாய் அன்னை மரியா நம் பயணம் வெற்றியாக அமைய தம் திருமகன் உயிர்த்த இயேசுவிடம் பரிந்து மன்றாடுவார். அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்!!!

## சிரி.....சிரி.....சிரி



**டாக்டர்: முன் பல் ரெண்டும் எப்படி விழுந்துச்சு...?**

**நோயாளி: சொல்ல மாட்டேன் டாக்டர்.**

**டாக்டர்: ஏன்?**

**நோயாளி: நடந்ததை வெளில சொன்னா மீதி பல்லும் கொட்டிடும்னு என் மனைவி சொல்லி இருக்கா டாக்டர்.**

# திருக்கெழுத்து புதிர் 88

## 1 குறிப்பேடு 1–15

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | 4 | | | | 5 |
| | | 6 | | 6a | 7 | | 8 | 9 | |
| | 10 | | 11 | | 12 | | | | 13 |
| 14 | 15 | 16 | | 17 | | 18 | | | 19 |
| | | 20 | | | 21 | | | 22 | |
| | | 23 | | | 24 | 25 | | | 26 |
| | | | 27 | | | 28 | | | 29 |
| | 30 | | | 31 | | | | | |
| | 32 | | | 33 | 34 | | | 35 | |
| 36 | | | | | 37 | | 38 | | 39 |

### இடமிருந்து வலம்

1.................நாங்கள் உம்முடையவர்கள்.
2. அவர் கட்டளைப்படி அதைச்........செல்லாமல் போனோம்
12. கூசுக்கு..........ரோது பிறந்தார்.
15..................வின் மகன் ஏபதியா.
20.............யிடம் ஆலோசனை கேட்டார்.
22. தீசாவின் புதல்வர்.............
25...............அதன் மேய்ச்சல் நிலங்கள்
30.................மின் மூதாதையான சோபால்
32.............வின் புதல்வர் செரேத்து.
36...............ஊரி பிறந்தார்.

### வலமிருந்து இடம்

4. உசீக்கு செர..........பிறந்தார்.
5. பெரியவர்.................ஆயிரம் பேருக்குச் சமம்.
6. மலை வாழ்.............கலைமானின் வேகமும்
6a. அங்கிருந்த .............த்தைக் கொன்றார்.
7................ன் மாந்தோப்புக்கு வா.
10.............என் கையில் ஒப்படைப்பீரா?
13.............க்கு மோட்சா பிறந்தார்.
18. ஏத்தானின் மகன்....................
19. பெயோரின் மகன்................
20................இடங்களுக்கு இழுத்துச் சென்றான்.
22..................அகேரின் புதல்வன்
23. ஆண்டவரின்..............உசாவுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தது.
26. எலிசமா மகன்..............
27...............க்கு அதன் மேய்ச்சல் நிலங்கள்...
29. ஊரின் மகன்..................
31. அரயோத்துக்கு...............பிறந்தார்.

33. இஸ்கோது, அபியேசர்............
37................என்னைத் துன்புறுத்தாது.
39. அனானி என்னும்.............

### மேலிருந்து கீழ்

1. யூதாவின் மருமகள்............
3. எலியோனாயின் புதல்வர் எலி...........பு.
5. ஆறு மாதங்களும்.............செலுத்தினார்.
8. அவர் அவருக்குப்................என்று பெயரிட்டார்.
9. நோவா, சேம், ...........எப்பேத்து.
11.............ரிபு, யாக்கின் ஆகியோர்.
19. ஏ.........தம் சகோதரரை விடச் சிறப்பு மிக்கவராக இருந்தார்.
20. ஆண்டவர்.............வழங்கினார்.
21. பேழையைச் சுமந்த............யர்.
24. வாளையும் ஏந்தி.........எய்து, போர்ப்பயிற்சி பெற்..
27................உதவி செய்வோருக்கும் வெற்றி
28. மகிழ்ச்சி பொங்க ஆர்ப்பரித்துப்...............

### கீழிருந்து மேல்

6. எரோகாமின் புதல்வர் யகரே..............
14. அவருடைய உறவின் முறையினர் எண்பது........
16.............ந்தோரின் உடைகளை உரித்தெடுக்க
17. உல்லாவின் புதல்வர்..............
18.................இட்சகார், எப்ரோன்
22. தலைமகன்...............
27. உன் வாளை ..............என்னைக் கொன்றுவிடு.
31. அவர் ..............வின் மகன்.
34. நேபோ,..........மெயோன் வரை குடியேறியிருந்தனர்.
35. ................குடும்பத்துக்கு சார்பாயிருந்தவர்கள்.
36. கடவுள் அதைக் கண்டு தீர்ப்புக்..............
38. தாவீதிடம்.............சேர்ந்து கொண்டனர்.
39...............வும் பேழைக்கு காவலாயிருந்தனர்.

## கண்ணீர் அஞ்சலி



தூய கத்தோலிக்க திருச்சபையின் 266 வது தலைவராக விளங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் 21–04–2025ல் காலமானார் என்று வத்திக்கான் கேமர் லெங்கோ கார்டினல் கெவின் ஃபெரெல் அறிவித்தார். ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் முதல் லத்தீன் அமெரிக்கத் தலைவரான போப் பிரான்சிஸ், தனது 88 ஆவது வயதில் இறையடி சேர்ந்ததாக வத்திக்கான் தெரிவித்துள்ளது. பரிசுத்த பாப்பரசர் அவர்களின் ஆன்மா நித்திய சமாதானத்தில் இளைப்பாற இறைவனை பிரார்த்திக்கிறோம்.

**இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் – பிரான்ஸ்**

## விவிலிய அறிவுப்போட்டி - 88



### எண்ணாகமம் 21–30

1. பாலாமை நோக்கி ‘ நீர் என்னை ஏன் அடிக்கிறீர்? மூன்று தடவையும் என்னை அடித்தீரே. நான் உமக்கு என்ன செய்தேன் என்று யாரால் கேட்கப்பட்டது?

2. எந்த நாட்டுப் படையினர் கப்பல்களில் வந்து எபிரேயர்களைப் பாழாக்கி, அசீரியரைத் தோற்கடித்து தாங்களும் அழிவார்கள் என்று பாலாக்கினால் கூறப்படுகிறது?

3. ‘ ஓர் ’ மலையில் ஏறி ஆரோனின் உடையை யாருக்கு அணிவிக்கும்படி ஆண்டவர் கட்டளையிடுகிறார்?

4. ஆண்டவர் மோயிசனை நோக்கி யாருடைய புதல்வனிடம் பரிசுத்த ஆவி வீற்றிருக்கிறார் என்று கூறியிருந்தார்?

5. ஆண்டவர் மோயிசனை நோக்கி கோலை எடுத்துக்கொண்டு யாரைக் கூட்டிச்சென்று, எதைப் பார்த்துப் பேசினால் தண்ணீர் வரும் என்று கூறியிருந்தார்?

6. திருவிழாக்களின் பலியின்போது புனிதமான நாளாகவும் வேலை ஒன்றும் செய்ய முடியாத நாளாகவும் ஏழு நாட்கள் பண்டிகை கொண்டாடும் நாளாக எந்த மாதம் அமைகிறது?

7. நீ இவர்களோடு போ. ஆனால் நான் உனக்கு கட்டளையிடும் வார்த்தையேயன்றி வேறு வார்த்தை பேசக்கூடாது என்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

8. இஸ்ராயேல் மக்களாகிய சபையாரெல்லாம் முதல் மாதத்திலே எந்தப் பாலைவனத்தை அடைந்தார்கள்?

9. பாலாக் பாலாமை எந்த மலையின் சிகரத்திற்கு அழைத்துச் சென்றார்.?

10. பேயோனின் புதல்வன் பாலாக் எந்த நாட்டில் எதன் அருகே வாழ்ந்து வந்தான்?

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் ~ 87
### எண்ணாகமம் 11-20

1. மோயிசனிடம். எண் – 14:12
2. ஆரோன். எண் – 17:47
3. மோயிசனால் எண் –11:29
4. லேவியரின் புதல்வர்களுக்கு எண் – 19:21
5. காலேப், யோசுவா எண் – 15:30
6. இஸ்ராயேல் மக்களால் எண் – 14:4
7. 250 பேரை. எண் – 17:35
8. இச்சைக்கோரி எண் – 12:34
9. இசாக்கார் கோத்திரத்தார் எண் – 11:15
10. ஏலோனின் புதல்வன் எண் – 11:16

## விவிலிய பொது அறிவுப்போட்டி 87
### பரிசு பெறுபவர்கள்
### எண்ணாகமம் 11~20

**பரிசு பெறுபவர்கள்**

1. திருமதி: யோண்ஷன் மேரிபீல்டா
2. திருமதி கெலன்யோசவ்.

**ஏனையவர்கள்:**

1. திருமதி: அன்ரன் றஞ்சிதம்
2. திருமதி: M.N மரியசெல்வநாயகம்.
3. திருமதி: யேசுதாசன் மேரியோயாசி.
4. திருமதி: நீற்ரா செல்வரட்ணம்.
5. திருமதி: யோசவ் கெலன்அன்னவதி.
6. திருமதி: அமலினி கவிதா.
7. திருவாளர். அன்ரனிமுத்து தேவசகாயம்.
8. திருவாளர்–அருளப்பு கிறிஸ்டியன்
9. செல்வி: சியாமளா யோசவ்.
10. செல்வி: லூசியாமேரி.
11. திருமதி: மல்லிகா.
12. திருமதி: யேம்ஸ் மேரி நீறாரா
13, திருமதி: லோறன் அன்ரனி யசிந்தா.

## புதிர் தோட்டம் 93

1. விடிய விடிய வேலை செய்பவனுக்கு ஒரு கை சின்னனாம். அது யார்?
2. பட்டய பட்டய நீக்கி பதினாறு பட்டயை நீக்கி முத்தப்பட்டய நீக்கி முன்னே வந்தான் சீமாட்டி. அவன் யார்?
3. கிணற்றைச் சுற்றி வெள்ளைக் கற்கள் . அது என்ன?
4. ஒற்றைக் காலில் சுற்றிடுவான் ஓய்ந்து போனால் படுத்திடுவான். அவன் யார்?
5. கிணற்றைச் சுற்றி புல் அது என்ன?
6. உயிரில்லை ஊருக்குப் போவான். கால் இல்லை வீட்டுக்கு வருவான். வார்த்தைகள் சொல்வான் அவன் யார்?
7. அரைஜான் சின்னவனுக்கு கால்ஜான் தொப்பி அவன் யார்?
8. உயிரில்லாதவன் சொன்னதை திரும்பச் சொல்வான் அது யார்?
9. தாய் இனிப்பாள், மகள் புளிப்பாள், பேத்தி மணப்பாள் அவர்கள் யார்?
10. உலர்ந்த கொம்பிலே மலர்ந்த மலர் அது என்ன?

### புதிர் தோட்ட விடைகள் 92

| | | |
|---|---|---|
| 1. சீப்பு<br>2. பூட்டு<br>3. நாக்கு<br>4. முட்டை | 5. தையல் ஊசியும் நூலும்<br>6. நெல்<br>7. நாற்காலி | 8. ஆறு<br>9. கரும்பு<br>10. சந்தனம் |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 87

## 2 அரசர்கள் 14-25

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

**1ம் பரிசு:** திருமதி: யோசவ் கெலன் அன்னவதி.

**2ம் பரிசு:** திருமதி: யேசுதாசன் யொய்சி.

**3ம் பரிசு :**திருமதி: M.N. மரிய செல்வநாயகம்.

### ஏனையவர்கள்

1–திருவாளர் அருளப்பு கிறிஸ்டியன்.
2–திருமதி: –நீற்றா செல்வரட்ணம்.
3–செல்வி: சியாமளா யோசவ்.
4–திருமதி: யோண்ஷன் நிஷாந்தினி.
5–திருமதி: அமலினி கவிதாஸ்.
6–திருமதி: டனிஸ்லொஸ் யோக மலர்.
7–திருமதி: வேர்ஜினியாரனிஸ்லஸ்
8–திருமதி: அன்ரன் றஞ்சிதம்.
9–திருமதி: லூயீஸ் லூட் வினிசியா.
10–திருமதி: பிறிம் றோஸ் டயஸ்.
11–திருமதி: –வில்பிறேட் ஜஸ்மிலா
12– திருமதி: –லோறன் அன்ரனி யசிந்தா.

## சிறுவர்களுக்கான விவிலிய வினா - 94

1) செல்வர் இறையாட்சிக்கு உட்படுவது பற்றி இயேசு கூறுவது என்ன?
2) இறையாட்சியின் பொருட்டு எவற்றை விட்டுவிடுவோர் அதை பன்மடங்காக பெறுவர்?
3) இயேசு எருசலேமில் பிற இனத்தவரிடம் ஒப்பிவிக்கப்பட்ட பின் அவருக்கு யாது நடக்கும்?
4)இயேசு பார்வையற்றவருக்கு எவ்வாறு நலமளித்தார்?
5) வரி தண்டுவோருக்கு தலைவர் யார்?
6) இயேசுவை பார்க்க காட்டு மரத்தில் ஏறிய சக்கேயுவிற்கு இயேசு கூறியது என்ன?
7) மினா நாணய உவமையின் படிப்பினை யாது?
8) ஒலிவம் என வழங்கப்படும் மலை அருகிலுள்ள ஊர்கள் எவை?
9) இயேசு ஒலிவ மலைச் சரிவை நெருங்கிய போது சீடர் உரத்த குரலில் இயேசுவை எவ்வாறு புகழ்ந்தனர்?
10) பரிசேயர் சீடரை கடிந்து கொள்ளும்படி இயேசுவிடம் கூறிய போது இயேசு கூறிய மறுமொழி என்ன?

## சரியான பதில்கள்

### இடமிருந்து வலம்

1. போதிகை 25:17
2. கைது 14:13
4. இங்கு 23:27
9. தடை 23:29
12. உசியா 15:34
14. யாரை 18:20
15. தீயன 21:6
16. பெயரை 24:17
17. நான் 19:7
21. மாத 15:13
25. அரசர் 21:26
27. நீங்கள் 17:36
28. தலைவன் 25:18
29. ஏகு 14ஃ8
30. கூற 18:36
34. தாய் 24:18
35. ஏவி 17:25
38. மது 20:3
41. கணக்கை 22:7
42. செய்து 17:35
43. பரு 19:24

### வலமிருந்து இடம்

5. வாக்கு 15:12
10. பரு 19:24
11. கையில்
12. உம் 16:7
19. படை 19:31
21. மாலை 16:15
27. நீர் 19:15
31. குல 17:19
39. மெய் 25:15
44. இருபது 16. 2

### மேலிருந்து கீழ்

1. போரில் 14:28
2. கைப் 18:10
3. மாதம் 15:8
4. இடை 21:15
5. குரு 16:6
6. வாக்கின் 24:13
7. போயி 20:11
8. பெரிய 25:9
9. தம் 21:10
20. நேர் 14:8
23. யூதா 17:18
24. காலை 19:35
25. அவனை 23:30
30. கூறியது 20:19
33. எது 20:13
37. காண 22:20
40. ஒரு 25:4

### கீழிருந்து மேல்

7. போதி 17:33
12. உடை 25. 29
13. சின 17. 14
18. நிழல் 20:11
22. தன் 24:6
24. காட்டி 18:4
25. அடை 20:7
26. சகுணம் 21. 6
27. நீரோ 19:4
32. நூலை 22:10
33. என் 22:17
36. விலக 17:23
38. மனை 20:13
41. கடத்த 17:23
42. செய்தான் 21:17
43. படு 23:13
44. இத்தகு 23:22

## உறவுகள் 93க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

1. இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுபவர்களே.
2. இறைவார்த்தை.
3. பன்னிரண்டு
4. பன்னிரண்டு
5. பேதுரு.
6. மூன்றுபேர். பேதுரு, யோவான், யாக்கோபு.
7. சமாரியர் ஒருவர்.
8. கடவுளுடைய திருநாட்களை பரிசுத்தமாய் அனுசரிப்பாயாக.
9. கண்.
10. இறந்தபின் தூரத்தில் தள்ள அதிகாரமுள்ள வருக்கே.

## பணியகச் செய்திகள்



**தி**ருமண ஆயத்தம் பெற விரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**2வது பிரிவு: 07-06-2025 {9 :30- 17:00}**
**08-06-2025 {9 :30- 15:00}**

**திருமண அருட்சாதன வகுப்பு,**
**பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்**

**இரு அமர்விலும் முக்கியம் கலந்து கொள்ளவும்**



**தி**ருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**வளர்ந்தோருக்கான**
**திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

**ஏப்ரல்:** புதன் 23ந் திகதி -சனி 26ந் திகதி 17:30-18:30

**மே:** புதன் 21ந் திகதி -சனி 24ந் திகதி 17:30-18:30

**யூன்:** புதன் 25ந் திகதி - சனி 28ந் திகதி 17:30-18:30

baptêmes

**சிறுவர்களுக்கான**
**திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

**ஏப்ரல்:** புதன் 23ந் திகதி -சனி 26ந் திகதி 18:00-19:30

**மே:** புதன் 21ந் திகதி -சனி 24ந் திகதி 18:00-19:30

**யூன்:** புதன் 25ந் திகதி - சனி 28ந் திகதி 18:00-19:30

**இவ் வகுப்புக்கு பெற்றோர், ஞானப் பெற்றோரின் வருகை முக்கியம்**

**பெல்வில் ஆலயத்தில் நடைபெறும்**

### ஆண்டவரைத் தேடுங்கள்

எசா:55:6 ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள். அவர் அண்மையில் இருக்கும்போதே அவரை நோக்கி மன்றாடுங்கள். உயிரோடு இருக்கும் போது தான் ஒரு மனிதனால் ஆண்டவரை தேடமுடியும். இறந்தபிறகு அவனால் ஆண்டவரைத்தேட முடியாது. உயிர் எப்போது பிரியும் என்று கடவுளைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது. ஆகவே உடலில் உயிர் இருக்கின்ற இந்த நாளிலேயே, ஆண்டவரைத் தேடுங்கள். ஆண்டவரைத் தேடி எங்கும் அலையத் தேவையில்லை. ஏனெனில் அவர் உங்கள் அருகில் இருக்கிறார். உங்களோடு இருக்கிறார். அவரை இரவு பகலாகத் தேடுங்கள். அதிகாலையில் தேடுங்கள். ஒவ்வொரு நாளும் ஆண்டவரைத்தேட நேரம் ஒதுக்குங்கள். ஆண்டவரைத் தேடினால் நீங்கள் அவரைக் கண்டடைவீர்கள். அவர் தருகின்ற அமைதியையும் ஆறுதலையும் ஆசீரையும் பெற்று நலமாக வாழ்வீர்கள். – ஆண்டவரே இவர்களுக்கு இரவு பகலாக உம்மைத் தேடுகின்ற இதயத்தை கொடுப்பீராக, மேலும் ஆண்டவரே இவர்களோடு தங்கி இவர்கள் கரம்பிடித்து இவர்களை வழிநடத்தும்.

### ஆடி - பணியகத் திருப்பலிகள்


**06- 07-2025 - புனித பேதுறு பாவுலு திருவிழா**
12:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

**27-07-2025 - புனித அன்னம்மாள் திருவிழா**
11:30 Chapelle NDRde Belleville – 75011 - Paris

**28-07-2025 - புனித யாகப்பர் திருவிழா**
15:30 Eglise St.Joseph des Nations-75011-Paris

### ஆவணி - பணியகத் திருப்பலிகள்

**36வது லூர்ட்ஸ் திருத்தலத் திருப்பயணம்**



**01/08/2025 ---04-08-2025**

**தூய கன்னி மரியாளின் விண்ணேற்புப் பெருவிழா 15-08-2023**
10:00 - Notre Dame de France
95560 - Baillet en France (வயல் மாதா)

**தூய கன்னி மரியாளின் விண்ணேற்புப் பெருவிழா 15-08-2023**
15:30 Eglise St. Joseph des Nations - 75011

### புரட்டாதி - பணியகத் திருப்பலிகள்

**06-09-2025 புனித சின்னதெரேசம்மாள் திருவிழா**
17 :00 Chapelle ND de Lourdes Combs la ville

**07- 09-2025 புனித அடைக்கலமாதா திருவிழா**
12:30 Eglise St. Joseph des Nations -75011-Paris

**08- 09-2025 புனித கன்னிமரியாளின் பிறப்பு திருவிழா -** Paris பணித்தள விழா
11:30 Chapelle NDR de Belleville –75011 - Paris

**14- 09-2025 அதிதூதர் தூய மிக்கேல் திருவிழா**
11:30 Chapelle NDR de Belleville –75011 -Paris

**14-09-2025 அன்னை வேளாங்கண்ணிதிருவிழா**
**Sevran -பணித்தளம்**
17:00 - Eglise St Martin – Sevran

**22- 09-2025 மருதமடு அன்னை திருவிழா**
14:30 - Chapelle Notre Dame des Ange
- Clichy



# பிரான்ஸ் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட தவக்காலச் சிறப்பு வழிபாடு - 2025

## சிலுவைப்பாதைத் தியானம் காட்சிப்படுத்தல் - திருமறைக்கலாமன்றம் - பிரான்ஸ்

